ஆனி 2026

கொலம்பஸ்

தமிழ்ச் சாரல்

கோடைக்கால இதழ்

உள்ளடக்கம்

தலையங்கம் 3

விளையாட்டுத் துறையில் பெண்கள் 7

கனா 10

காஞ்சனை 11

கண்ணும் கண்ணும் நோக்கினால் 28

பெல்காம் நினைவலைகள் 30

சித்திரம் 35

கொலம்பஸ் தமிழ்ச் சங்கச் செய்திகள் 38

குதிரைவாலி உப்புமா 48

இந்திய இளம் தலைமுறை 50

நீட்டு கூட்டு மடக்கு பெருக்கு 54

பெண் பாதுகாப்புக்கு 56

வசந்தகால சாரல் 58

அறிவோம் – அறியப்படாத தமிழகம் 63

தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு 77

சாரல் குழு 78

சரிபார்த்தோர் குழு 79

தலையங்கம்

அன்பான தமிழ் உள்ளங்களே, அனைவருக்கும் இனிய வணக்கம்!

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, நம் "சாரல்" இதழ் மூலம் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இந்த இடைவெளிக்குப் பிறகு இதழை மீண்டும் கொண்டு வந்தது நமக்குப் பெருமையான விஷயம். இது வெறும் ஓர் இதழ் அல்ல — நம் அனைவரையும் இணைக்கும் ஒரு பாலம்.

2025 ஜூன் மாதம் முதல் புதிய செயற்குழுவாகிய நாங்கள் கொலம்பஸ் தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம். இந்தக் காலத்தில், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லா வயதினருக்கும் ஏற்ற பல நிகழ்ச்சிகளை நடத்தினோம். சில சவால்கள் இருந்தாலும், உங்கள் நம்பிக்கையும் ஆதரவும் எங்களுக்குப் பெரிய பலம். புதிய குழுவாக நாங்கள் தொடர்ந்து கற்றுக்கொண்டு, நம் சமூகத்திற்காகவும் நம் தமிழ் மொழிக்காகவும் சிறந்த முறையில் வேலை செய்ய முயற்சிக்கிறோம்.

"மொழியைக் காப்பது நம் கடமை; அதை வளர்ப்பது நம் பொறுப்பு — அடுத்த தலைமுறையிடம் கொண்டு சேர்ப்பது நம் பணி."

2025 மே முதல் இன்று வரை, எல்லா வயதினரையும் மனதில் கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம்:

1. பொன் மாலைப் பொழுது — அமெரிக்காவுக்கு வரும் பெரியவர்களுக்கு ஏற்ற ஒரு நல்ல சந்திப்பு. அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து பேசி, மகிழ்ந்து, மன அழுத்தத்தை மறக்கும் ஓர் இனிமையான நேரம்.

2. கோடைச் சுற்றுலா (Summer Picnic) — திறந்த வெளியில் உணவு, பொழுதுபோக்கு, விளையாட்டுகளுடன் ஒரு தமிழ்க் குடும்பங்களின் சந்திப்பு. குழந்தைகளுக்கு நெருப்பில்லா சமையல், பழம்/காய்கறி செதுக்குதல் போட்டிகள், பெரியவர்களுக்கு சமையல் போட்டி எல்லாம் நடந்தன.

3. விளையாட்டுப் போட்டிகள் — செஸ், டேபிள் டென்னிஸ், பிக்கிள்பால், பேட்மிண்டன், கைப்பந்து (volleyball) போன்ற பல விளையாட்டுகளை நடத்தினோம். குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் வரை அனைவரும் கலந்துகொண்டார்கள்.

4. தமிழ்க் கற்றலை ஊக்குவித்தல் — திருக்குறள் மற்றும் ஆத்திச்சூடி கற்க ஊக்கப் பரிசுகள் வழங்கினோம். ஒரு திருக்குறளுக்கு $1, நான்கு ஆத்திச்சூடிக்கு $1 என்ற முறையில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் பரிசுத் தொகை வழங்கினோம். குழந்தைகளுக்கு ஓவியப் போட்டியும் நடத்தினோம்.

5. லேடிஸ் நைட் (Ladies Night) — இசையும் சுவையான உணவும் நிறைந்த, பெண்களுக்கான மகிழ்ச்சியான ஓர் இரவு.

6. தமிழர் திருநாள் கொண்டாட்டம் (பிப்ரவரி 13, 2026) — தமிழர் திருநாளை சிறப்பாகக் கொண்டாடினோம். இந்த நிகழ்வில் டாக்டர் பால் அவர்களின் மேடைச் சிரிப்புரை (ஸ்டாண்ட்-அப் காமெடி) நிகழ்ச்சி நடந்தது; சிரிப்புடன் சேர்த்து உடல்நலம் பற்றிய பயனுள்ள குறிப்புகளையும் வழங்கினார் — இதை 800-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு குடும்பத்துடன் கண்டு மகிழ்ந்தனர்.

7. சித்திரைத் திருநாள் — தமிழ்ப் புத்தாண்டு விழா (மே 9, 2026) — இது இந்த ஆண்டின் மிகப் பெரிய நிகழ்வு! 800-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்த விழா, நம் சங்கத்தில் சமீப காலத்தில் நடந்த கழ்வுகளில் ஒரு பெரிய வெற்றி.
பாரம்பரிய சிலம்பம், பறை இசை, கலை, இசை, நடனம், சுவையான விருந்து — எல்லாம் சேர்ந்து ஓர் அருமையான தமிழ் விழாவாக நடந்தது.

இவ்வளவு பேர் கலந்துகொண்டது, நம் சமூகத்தின் ஒற்றுமையையும், நம் பண்பாட்டின் மீதான அன்பையும் காட்டுகிறது. இந்த வெற்றி எங்கள் குழுவின் வெற்றி மட்டும் அல்ல — இது நம் ஒற்றுமையின் வெற்றி. இத்தகைய நிகழ்வுகளை நடத்துவதற்கு எங்களுக்கு உறுதுணையாகப் பல தன்னார்வலர்களும் ஆலோசனைக் குழுவும் உள்ளனர் .

வருடம் முழுவதும் அசராமல் பல தமிழ் ஆசிரியர்கள் இங்கே வளரும் குழந்தைகளுக்கு நம் மொழியைக் கற்றுக் கொடுக்கும் சேவையும் செய்து வருகின்றனர் . நம் தமிழ் பள்ளி , சாரல்க் குழு எனப் பல தன்னார்வலர்கள் இலக்கியக் குழுவாகச் செயல் படுகின்றனர் . அதில் பல புதிய மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியும் செய்து கொண்டிருக்கிறோம் .

இந்த ஆண்டு நம் சங்கத்தின் இளைஞர் குழு (Youth Committee) பல சமூக சேவைகளில் ஈடுபட்டது என்பதைப் பெருமையோடு சொல்கிறேன். நம் இளைஞர்கள் Mid-Ohio Food Bank மற்றும் Ronald McDonald House ஆகிய இடங்களில் தன்னார்வத் தொண்டர்களாக சேவை செய்தனர். உள்ளூர் மக்களுக்கு உதவும் இந்த வாய்ப்பு, நம் இளைஞர்களுக்குப் பிறருக்கு உதவுவதன் முக்கியத்துவத்தையும், சமூகப் பொறுப்பையும் கற்றுக் கொடுத்தது. தமிழர் என்றால் வெறும் மொழிப்பற்று உடையவர்கள் மட்டும் அல்ல — மற்றவர்களுக்கு உதவும் நல்ல மனமும் கொண்டவர்கள்தான் என்பதை நம் இளைஞர்கள் செயலில் காட்டினார்கள்.

இந்த ஓர் ஆண்டில் நாங்கள் கொண்டு வந்த மாற்றங்கள், நடத்திய நிகழ்வுகள், செய்த சேவைகள் — எல்லாம் உங்கள் ஒத்துழைப்பால் மட்டுமே நடந்தன. தொடர்ந்து உழைக்கும் தன்னார்வலர்கள், நிர்வாகக் குழு, ஆசிரியர்கள், அன்பளிப்பாளர்கள், மற்றும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் என் மனமார்ந்த நன்றி. நம் சங்கம் எந்த ஒரு மதமோ அரசியல் சார்போ உடையது அல்ல — எல்லோரையும் சேர்த்து வைக்கும் ஓர் அன்பான தமிழ்க் குடும்பம் என்று உறுதியாகச் சொல்கிறேன்.

வரும் ஆண்டுகளிலும் இதே உற்சாகத்துடன், புதிய இலக்குகளுடன், நம் சங்கத்தை மேலும் முன்னேற்றுவோம். உங்கள் ஆதரவே எங்கள் பலம்; உங்கள் நம்பிக்கையே எங்கள் வழிகாட்டி. இணைந்து பயணிப்போம், தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்ப்போம், அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டுவோம்.

நன்றி! வாழ்க தமிழ்!

லாவண்யா ராமு

விளையாட்டுத் துறையில் பெண்கள்

சுமித்ராதேவி கலியபெருமால்

மீசையில்லா பாரதியும் உண்டு! மீசையுள்ள அன்னை தெரேசாவும் உண்டு! அன்பு பெண்களுக்கு மட்டுமே! விளையாட்டு வீரம் சார்ந்த செயல்கள் ஆண்களுக்கானது! என்ற பாகுபாடு மறைந்து, இன்று பெண்கள் விளையாட்டுத் துறையில் ஆற்றிவரும் சாதனைகள் வரலாற்றையே மாற்றும் விதமாக உள்ளது.

ஆம்! 2025-ல் நவி மும்பையில் நடைபெற்ற மட்டைப்பந்து போட்டியில், இந்திய தேசிய மகளிர் அணி தென் ஆப்ரிக்காவை வென்று முதல் உலகக்கோப்பையைப் பெற்றது. அதே போன்று இந்திய மகளிர் கபடி அணியும் பங்களாதேஷ் டாக்காவில் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியில் சீனா தாய்ப்பெய் அணியை வென்று, இந்தியாவிற்கு ஒரு பெரிய வெற்றியைக் கொண்டு வந்துள்ளனர்.

இந்த சாதனைக்குப் பின்னால் அவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆணும் பெண்ணும் நிகர் என்று கூறினாலும் நடைமுறையில் செயற்கை நுண்ணறிவு கூட தனது பரிந்துரையை ஆண்களுக்குச் சாதகமாகவே அளித்து வருகிறது. ஆடவர் அணிக்கு நிகராக, பயிற்சிகளுக்கான போதிய வசதிகளோ, ஆரவாரித்துக் கொண்டாடப் பெரிய ரசிகர் கூட்டமோ,

ஊக்கம் கொடுக்கும் ஊடக கவனமோ பெண்கள் அணிக்கு மிகவும் குறைவு! ஏன் இல்லவே இல்லை என்று தான் சொல்ல வேண்டும்!! இருந்தும், மற்ற நாடுகளில் பல விதத்திலும் பயிற்சி கொடுக்கப்பட்டு மிகுந்த திறனுடன் வரும் சக போட்டியாளர்களை வென்றார்கள். இந்த வெற்றிக்கு மிக முக்கிய காரணம் பயிற்சியைத் தாண்டி அவர்களுக்குள் இருந்த சாதிக்க வேண்டும் என்ற எண்ணம், இது உண்மையிலேயே பாராட்ட வேண்டிய விஷயம்.

குறிப்பாக மட்டைப்பந்து அணித்தலைவர் ஹர்மான்ப்ரீட் கவுர், இந்த அணியைத் திறமையாக வழிநடத்திய அழகு மெய்சிலிர்க்க வைத்தது. அவரின் வெறித்தனமான பந்தடிப்பு மற்றும் உறுதியான தலைமைத்திறன் அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. போட்டி கடினமாக இருந்தாலும் அவரின் முகத்தில் தோல்வியின் அச்சம் துளிகூட இல்லை. ஒரு அணித்தலைவராக அணியின் மற்ற வீராங்கனைகளுக்கு ஊக்கம் அளித்து அப்படியே வெற்றிப் பாதையில் கொண்டு சென்றது மிக அருமை.

அடுத்ததாக அணியின் முக்கிய தொடக்க ஆட்டக்காரர் ஸ்ம்ரிதி மந்தனா, அழகும் ஆற்றலும் ஒருசேர அமைந்த நபர். இவரது பந்தடிப்பு ரசிகர்களுக்கு ஒரு கலை நிகழ்ச்சியைப் பார்ப்பது போல இருந்தது. இவரது ஆட்டப்பகுதி அணியின் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்தது.

புதிய தலைமுறையின் அதிரடியாக இறங்கியவர் ஷாபாலி வர்மா. இந்த இளம்வயதில் இவரது அதிரடி பந்தடிப்பு ஆரம்ப ஓவர்களிலேயே எதிரணிக்கு ஆட்டத்தில் பயத்தைக் கொடுத்தது. இவர் கண்டிப்பாக எதிர்காலத்தில் மட்டைப்பந்து நட்சத்திரமாக இருப்பார் என்பதில் துளிகூட சந்தேகம் இல்லை. இந்திய மகளிர் அணியை உலக மேடையில் முன்னணியில் நிறுத்திய ஷாபாலி வர்மா, இன்றைய தலைமுறைக்குப் பெரும் ஊக்கமாக உள்ளார்.

அடுத்தது பண்முகத்திறமையாளர் தீப்தி சர்மா, போட்டி கடினமான பாதையை நோக்கிப் போகும் போது, அமைதியாக விளையாடி மீண்டும் வெற்றிப் பாதையில் கொண்டு சென்றார்.

உற்சாக வீராங்கனை ஜெமிமாஹ ரோட்ரிக்கஸ், இவர் களத்தில் இருக்கும் போது அணிக்கு ஒரு தனி உற்சாகம் கிடைக்கும். வேகமாக ஓட்டம் எடுப்பதில், இவருக்கு நிகர் இவரே!
இளம் இலக்குக்காப்பாளர் ரிச்சா கோஷ், கடைசி ஓவர்களில் போட்டியின் நிலையை மாற்றிய இவரின் அதிரடி பந்தடிப்பு அணிக்கு மிகப் பலமாக அமைந்தது.

இந்திய மகளிர் கபடி அணியின் சமீபத்திய சாதனைகள் உலக அளவில் அசரவைக்கும் வளர்ச்சியாக இருக்கிறது. 2025-இல் இந்தியப் பெண்கள் கபடி குழு டாக்கா வில் நடைபெற்ற போட்டியில் சீனாவை 35-28 என்ற கணக்கில் தோற்கடித்து உலகக் கோப்பையை வென்றது.
ரிது நேகி, சஞ்சு தேவி மற்றும் அனு குமாரி இவர்களுடைய விளையாட்டு மிகவும் பாராட்டப்பட வேண்டியது. சஞ்சு தேவி, மிக மதிப்புமிக்க வீரர் விருதும் வென்றார். ரைடர்ஸ் வீராங்கனை அனு குமாரி எதிர் அணியில் நுழைந்து புள்ளிகளைக் குவித்து அணியை வெற்றிப் பாதையில் கொண்டு சென்றார்.

அடுப்பங்கறையை ஆடும் களமாக மாற்றி, கரண்டி பிடித்த கை மட்டைப்பந்து மட்டை பிடித்துப் பல சதங்களை எளிதாக அள்ளிவரும் நம் பெண்கள் அணிக்கு நம் அனைவரது வாழ்த்துக்கள். மற்ற துறைகளை ஒப்பிடும் போது விளையாட்டுத் துறையில் உலகளவில் இந்தியப் பெண்களின் சாதனைப் பட்டியல் மிகக் குறைவாகவே உள்ளது. திறமை இருந்தும் இந்த சவால்களை எதிர் கொள்ளப் பயந்து இருக்கும் நிலை மாறி, நிறையப் பெண்கள் வெளியே வர வேண்டும். இந்திய அணி மேலும் பல விளையாட்டுத் துறைகளிலும் சாதிக்க வேண்டுமென என் கட்டுரையை முடிக்கிறேன்.

கனா!

லிண்டா மார்ஷல்

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்!
நாமக்கல் கவிஞரின் பாடல் வரிகள்
இன்றும் நினைவுகளில் இருப்பவை.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்
என்றார் திருவள்ளுவர்,
தனக்காகப் பிறரை அழிப்பதில் தவறில்லை
என்கின்றனர் இன்று வாழ்பவர்.

எங்கே செல்கிறது இந்த உலகம்?
யாரைப் பகைக்கிறது இந்த அகிலம்?
அயலானிடம் அன்பில்லையானால் அனைத்துமே
பொய்யல்லவா?
அவனை அல்ல! தன்னையே அழிப்பது புரியவில்லையா?

கத்தியின்றி ரத்தமின்றி புது உலகமொன்று வேண்டும்,
சத்தியத்தை மட்டும் நம்பி நடப்போர் வாழ வேண்டும்.

என் கனா நிஜமாகட்டும்,
புதியதோர் உலகம் பூக்கட்டும்.
அன்பு மட்டுமே நிலைக்கட்டும்,
அமைதி அங்கே பெருகட்டும்.

அழுகையும் கவலையும் அங்கே இல்லை,
மடிதலும் மரணமும் அவ்விடம் இல்லை,
அங்கே புலியும் கன்றும் கூடி மேயும்,
புதிய வானும் பூமியும் புலப்படும்!

படித்ததில் பிடித்தது - சிறு கதை
மூலம் - அழியாச் சுடர்கள்
(https://azhiyasudargal.blogspot.com/)

காஞ்சனை

அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. காரணம் என்னவென்று சொல்ல முடியவில்லை. மனசுக்குக் கஷ்டமும் இல்லை, அளவுக்கு மிஞ்சிய இன்பமும் இல்லை, இந்த மாதிரித் தூக்கம் பிடிக்காமல் இருக்க. எல்லோரையும் போலத்தான் நானும். ஆனால் என்னுடைய தொழில் எல்லோருடையதும்போல் அல்ல. நான் கதை எழுதுகிறேன்; அதாவது, சரடுவிட்டு, அதைச் சகிக்கும் பத்திரிகை ஸ்தாபனங்களிலிருந்து பிழைக்கிறவன்; என்னுடையது அங்கீகரிக்கப்படும் பொய்; அதாவது - கடவுள், தர்மம் என்று பல நாமரூபங்களுடன், உலக 'மெஜாரிட்டி'யின் அங்கீகாரத்தைப் பெறுவது; இதற்குத்தான் சிருஷ்டி, கற்பனா லோக சஞ்சாரம் என்றெல்லாம் சொல்லுவார்கள். இந்த மாதிரியாகப் பொய் சொல்லுகிறவர்களையே இரண்டாவது பிரம்மா என்பார்கள். இந்த நகல் பிரம்ம பரம்பரையில் நான் கடைக்குட்டி. இதை எல்லாம் நினைக்கப் பெருமையாகத்தான் இருக்கிறது. நாங்கள் உண்டாக்குவது போல், அந்தப் பிரமனின் கைவேலையும் பொய்தானா? நான் பொய்யா? திடீரென்று இந்த வேதாந்த விசாரம் இரவு சுமார் பன்னிரண்டு மணிப்போதுக்கு ஏற்பட்டால், தன்னுடைய ஜீரண சக்தியைப் பற்றி யாருக்குத்தான் சந்தேகம் தோன்றாது? "அட சட்!" என்று சொல்லிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தேன்.

உட்கார்ந்தபடி எட்டினாற் போல மின்சார விளக்கைப் போடுவதற்கு வாகாக வீட்டைக் கட்டி வைத்திருந்தான். போட்டேன். வெளிச்சம் கண்களை உறுத்தியது. பக்கத்துக் கட்டிலில் என் மனைவி தூங்கிக் கொண்டிருந்தாள். தூக்கத்தில் என்ன கனவோ? உதட்டுக் கோணத்தில் புன்சிரிப்பு கண்ணாம்பூச்சி விளையாடியது. வேதாந்த விசாரத்துக்கு மனிதனை இழுத்துக்கொண்டு போகும் தன்னுடைய நளபாக சாதுர்யத்தைப் பற்றி இவள் மனசு கும்மாளம் போடுகிறது போலும்! தூக்கக் கலக்கத்தில் சிணுங்கிக் கொண்டு

புரண்டு படுத்தாள். அவள் மூன்று மாசக் கர்ப்பிணி. நமக்குத்தான் தூக்கம் பிடிக்கவில்லை என்றால், அவளையும் ஏன் எழுப்பி உட்கார்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்?

உடனே விளக்கை அணைத்தேன். எனக்கு எப்போதும் இருட்டில் உட்கார்ந்துகொண்டிருப்பதில் ஒரு நிம்மதி. இருட்டோ டு இருட்டாய், நாமும் இருட்டும் ஐக்கியமாய், பிறர் பார்வையில் விழாமல் இருந்து விடலாம் அல்லவா? நாமும் நம் இருட்டுக் கோட்டைக்குள் இருந்து கொண்டு நம் இஷ்டம்போல் மனசு என்ற கட்டை வண்டியை ஓட்டிக் கொண்டு போகலாம் அல்லவா? சாதாரணமாக எல்லோரும் மனசை நினைத்த இடத்துக்கு நினைத்த மாத்திரத்தில் போகும் ரதம் என்று சொல்லுவார்கள். மனித வித்து அநாதி காலந்தொட்டு இன்று வரையில் நினைத்து நினைத்துத் தேய்ந்து தடமாகிவிட்ட பாதையில் தான் இந்தக் கட்டை வண்டி செல்லுகிறது. சக்கரம் உருண்டு உருண்டு பள்ளமாக்கிய பொடிமண் பாதையும் நடுமத்தியில் கால்கள் அவ்வளவாகப் பாவாத திரடுந்தான் உண்டு; ஒவ்வொரு சமயங்களில் சக்கரங்கள் தடம்புரண்டு திரடு ஏறி 'டொடக்' என்று உள்ளே இருக்கிறவர்களுக்கு அதிர்ச்சி கொடுக்கிறதும் உண்டு; மற்றப்படி சாதுவான, ஆபத்தில்லாத மயிலைக் காளைப் பாதை. நினைவுச் சுகத்தில் இருட்டில் சிறிது அதிகமாகச் சுண்ணாம்பு தடவிவிட்டேன் போலும்! நாக்கு, சுருக்கென்று பொத்துக்கொண்டது. நான் அதைப் பொருட்படுத்துவதில்லை. இருட்டில் வெற்றிலை போடுவது என்றால், அதிலும் மனசை, கயிற்றை முதுகில் போட்டு விட்டுத்தானே போகும்படி விட்டுவிடுவது என்றால், இந்த விபத்துக்களையெல்லாம் பொருட்படுத்தலாமா? உள்ளங்கையில் கொட்டி வைத்திருந்த புகையிலையைப் பவித்தரமாக வாயில் போட்டுக் கொண்டேன்.

சீ! என்ன நாற்றம்! ஒரேயடியாகப் பிணவாடை அல்லவா அடிக்கிறது? குமட்டல் எடுக்க, புகையிலையின் கோளாறோ என்று ஜன்னல் பக்கமாகச் சென்று அப்படியே உமிழ்ந்து, வாயை உரசிக் கொப்புளித்துவிட்டு வந்து படுக்கையின் மீது உட்கார்ந்தேன்.

துர்நாற்றம் தாங்க முடியவில்லை, உடல் அழுகி, நாற்றம் எடுத்துப் போன பிணம் போல; என்னால் சகிக்க முடியவில்லை. எனக்குப்

புரியவில்லை. ஜன்னல் வழியாக நாற்றம் வருகிறதோ? ஊசிக் காற்றுக் கூட இழையவில்லையே! கட்டிலை விட்டு எழுந்திருந்து ஜன்னலில் பக்கம் நடந்தேன். இரண்டடி எடுத்து வைக்கவில்லை; நாற்றம் அடியோடு மறைந்துவிட்டன. என்ன அதிசயம்! திரும்பவும் கட்டிலுக்கு வந்தேன். மறுபடியும் நாற்றம். அதே துர்க்கந்தம். கட்டிலின் அடியில் ஏதேனும் செத்துக் கிடக்கிறதோ? விளக்கை ஏற்றினேன். கட்டிலடியில் தூசிதான் தும்மலை வருவித்தது. எழுந்து உடம்பைத் தட்டிக் கொண்டு நின்றேன்.

தும்மல் என் மனைவியை எழுப்பிவிட்டது. "என்ன, இன்னுமா உங்களுக்கு உறக்கம் வரவில்லை? மணி என்ன?" என்று கொட்டாவி விட்டாள்.

மணி சரியாகப் பன்னிரண்டு அடித்து ஒரு நிமிஷம் ஆயிற்று.

என்ன அதிசயம்! நாற்றம் இப்பொழுது ஒருவித வாசனையாக மாறியது. ஊதுவத்தி வாசனை; அதுவும் மிகவும் மட்டமான ஊதுவத்தி; பிணத்துக்குப் பக்கத்தில் ஏற்றி வைப்பது.

"உனக்கு இங்கே ஒரு மாதிரி வாசனை தெரியுதா?" என்று கேட்டேன்.

"ஒண்ணும் இல்லியே" என்றாள்.

சற்று நேரம் மோந்து பார்த்துவிட்டு, "ஏதோ லேசா ஊதுவத்தி மாதிரி வாசனை வருது; எங்காவது ஏற்றி வைத்திருப்பார்கள்; எனக்கு உறக்கம் வருது; விளக்கை அணைத்துவிட்டுப் படுங்கள்" என்றாள்.

விளக்கை அணைத்தேன். லேசாக வாசனை இருந்துகொண்டுதான் இருந்தது. ஜன்னலருகில் சென்று எட்டிப் பார்த்தேன். நட்சத்திர வெளிச்சந்தான்.

லேசாக வீட்டிலிருந்த ஜன்னல், வாசல், கதவுகள் எல்லாம் படபடவென்று அடித்துக்கொண்டன. ஒரு வினாடிதான். அப்புறம் நிச்சப்தம். பூகம்பமோ? நட்சத்திர வெளிச்சத்தில் பழந்தின்னி

18+
VARITIES OF
BIRYANIS
NAWABI
Hyderabad house
Biryani Place
29+
LOCATIONS
USA & CANADA
BEST IN TOWN
6395 Perimeter Dr, Dublin, OH 43016 | PH: (614) 956-7020
8481 Sancus Blvd, Columbus, OH 43240 | PH: (614) 396-9221
11963 Lebanon Rd, Sharonville, OH 45241 | PH: (513) 956-5678
www.hhcolumbus.com
DINE-IN & TAKEOUT
WE DO CATERING FOR ALL OCCASIONS
CELEBRATE THE
INDIAN FLAVOURS WHILE YOU SHOP
We Try Our Best to Serve You...
• Fresh Vegetables
• Varities of Frozen Products
• All Types of Cosmetics
• Pooja Items
Competitive Prices on
Dals/flours/and Other Products
Trinethra
Super Market
STORE HOURS
10AM TO 10PM
8481 SANCUS BLVD, COLUMBUS, OH - 43240 PH: 614-396-9023
Dadu's
Bakery & Sweets
Get Your Customised
Cake Done for Your Special Occasion From Us.
SWEETS, CAKES, PASTRIES, INDIAN SNACKS, INDIAN PIZZAS, CHATS AND ROLLS
8495 Sancus Blvd (Trinethra Supermarket Complex),
Columbus, OH 43240. Call us @ 614-505-0047

வௌவால் ஒன்று தன் அகன்ற தோல் சிறகுகளை விரித்துக் கொண்டு பறந்து சென்று எதிரில் உள்ள சோலைகளுக்கு அப்பால் மறைந்தது.

துர்நாற்றமும் வாசனையும் அடியோடு மறைந்தன. நான் திரும்பி வந்து படுத்துக் கொண்டேன்.

நான் மறுநாள் விடியற்காலம் தூக்கம் கலைந்து எழுந்திருக்கும்போது காலை முற்பகலாகிவிட்டது. ஜன்னல் வழியாக விழுந்து கிடந்த தினசரிப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு வீட்டின் வெளிமுற்றத்துக்கு வந்து பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தேன். கிரீச்சிட்டு ஆட்சேபித்துவிட்டு அது என்னைச் சுமந்தது.

"ராத்திரி பூராவும் தூங்காமே இவ்வளவு நேரம் கழித்து எழுந்ததும் அல்லாமல் இப்படி வந்து உட்கார்ந்து கொண்டால் காப்பி என்னத்துக்கு ஆகும்?" என்று என் சகதர்மிணி பின்பக்கமாக வந்து நின்று உருக்கினாள். 'ஐக்கிய நாடுகளின் ஜரூர் மிகுந்த எதிர் தாக்குதல்கள் தங்குதடையில்லாமல் முன்னேறி வருவதில்' அகப்பட்டுக் கொண்ட ஜனநாயகத்திலும் உலக சமாதானத்திலும் உறுதி பிறழாத நம்பிக்கை கொண்ட எனக்குச் சற்றுச் சிரமமாகத்தான் இருந்தது.

"அது உன் சமையல் விமரிசையால் வந்த வினை" என்று ஒரு பரிகாசத் தாக்குதல் நடத்திவிட்டு எழுந்தேன்.

"உங்களுக்குப் பொழுதுபோகாமே என் மேலே குத்தம் கண்டு பிடிக்கணும்னு தோணிட்டா, வேறே என்னத்தைப் பேசப் போறிய? எல்லாம் நீங்கள் எளுதுகிற கதையை விடக் குறைச்சல் இல்லை!" என்று சொல்லிக் கொண்டே அடுப்பங்கரைக்குள் புகுந்தாள்.

நானும் குடும்ப நியதிகளுக்குக் கட்டுப்பட்டு, பல்லைத் துலக்கிவிட்டு, கொதிக்கும் காப்பித் தம்ளரைத் துண்டில் ஏந்தியபடி பத்திரிகைப் பத்திகளை நோக்கினேன்.

அப்போது ஒரு பிச்சைக்காரி, அதிலும் வாலிபப் பிச்சைக்காரி,

ஏதோ பாட்டுப் பாடியபடி, "அம்மா, தாயே!" என்று சொல்லிக் கொண்டு வாசற்படியண்டை வந்து நின்றாள்.

நான் ஏறிட்டுப் பார்த்துவிட்டு இந்தப் பிச்சைக்காரர்களுடன் மல்லாட முடியாதென்று நினைத்துக் கொண்டு பத்திரிகையை உயர்த்தி வேலி கட்டிக் கொண்டேன்.

"உனக்கு என்ன உடம்பிலே தெம்பா இல்லை? நாலு வீடு வேலை செஞ்சு பொளெச்சா என்ன?" என்று அதட்டிக் கொண்டே நடைவாசலில் வந்து நின்றாள் என் மனைவி.

"வேலை கெடச்சாச் செய்யமாட்டேனா? கும்பி கொதிக்குது தாயே! இந்தத் தெருவிலே இது வரையில் பிடியரிசிக் கூடக் கிடைக்கவில்லை; மானத்தை மறைக்க முழத்துணி குடம்மா" என்று பிச்சைக்கார அஸ்திரங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்தாள்.

"நான் வேலை தாரேன்; வீட்டோடவே இருக்கியா? வயத்துக்குச் சோறு போடுவேன்; மானத்துக்குத் துணி தருவேன்; என்ன சொல்லுதே!" என்றாள்.

"அது போதாதா அம்மா? இந்தக் காலத்திலே அதுதான் யார் கொடுக்கிறா?" என்று சொல்லிக்கொண்டே என் மனைவியைப் பார்த்துச் சிரித்து நின்றாள்.

"என்ன, நான் இவளை வீட்டோடே ரெண்டு நாள் வெச்சு எப்படி இருக்கான்னுதான் பாக்கட்டுமா? எனக்குந்தான் அடிக்கடி இளைப்பு இளைப்பா வருதே" என்றாள் என் மனைவி.

"சீ! உனக்கு என்ன பைத்தியமா? எங்கேயோ கெடந்த பிச்சைக்காரக் கழுதையை வீட்டுக்குள் ஏத்த வேண்டும் என்கிறாயே! பூலோகத்திலே உனக்கு வேறே ஆளே ஆம்பிடலியா?" என்றேன்.

வெளியில் நின்ற பிச்சைக்காரி 'களுக்' என்று சிரித்தாள். சிரிப்பிலே ஒரு பயங்கரமான கவர்ச்சி இருந்தது. என் மனைவி வைத்த கண் மாறாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மனசு முழுவதும் அந்த அநாமத்திடமே ஐக்கியமாகிவிட்டது போல் இருந்தது.

"முகத்தைப் பார்த்தா ஆள் எப்படி என்று சொல்ல முடியாதா? நீ இப்படி உள்ளே வாம்மா" என்று மேலுத்தரவு போட்டுக்கொண்டு அவளை உள்ளே அழைத்துச் சென்றாள்.

உள்ளுக்குள்ளே பூரிப்புடன் அந்த மாய்மாலப் பிச்சைக்காரி பின் தொடர்ந்தாள். என்ன! நான் கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் பாதங்களையே பார்த்தேன். அவை தரைக்குமேல் ஒரு குன்றிமணி உயரத்துக்கு அந்தரத்தில் நடமாடின. உடம்பெல்லாம் எனக்குப் புல்லரித்தது. மனப் பிரமையா? மறுபடியும் பார்க்கும் போது, பிச்சைக்காரி என்னைப் புன்சிரிப்புடன் திரும்பிப் பார்த்தாள். ஐயோ, அது புன்சிரிப்பா! எலும்பின் செங்குருத்துக்குள் ஐஸ் ஈட்டியைச் செருகியதுமாதிரி என்னைக் கொன்று புரட்டியது அது!

என் மனைவியைக் கூப்பிட்டேன். அவள் வீட்டுக்குள் வருவது நல்லதற்கல்ல என்று சொன்னேன். இந்த அபூர்வத்தை வேலைக்காரியாக வைத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று ஒரேயடியாகப் பிடிவாதம் செய்தாள். மசக்கை விபரீதங்களுக்கு ஓர் எல்லை இல்லையா? என்னவோ படுஆபத்து என்றுதான் என் மனசு படக்குப் படக்கு என்று அடித்துக்கொண்டது. மறுபடியும் எட்டி அவள் பாதங்களைப் பார்த்தேன். எல்லோரையும் போல் அவள் கால்களும் தரையில்தான் பாவி நடமாடின. இது என்ன மாயப்பிரமை!

தென்னாலிராமன் கறுப்பு நாயை வெள்ளை நாயாக்க முடியாது என்பதை நிரூபித்தான். ஆனால் என் மனைவி பிச்சைக்காரிகளையும் நம்மைப் போன்ற மனிதர்களாக்க முடியும் என்பதை நிரூபித்தாள். குளித்து முழுகி, பழசானாலும் சுத்தமான ஆடையை உடுத்துக் கொண்டால் யாரானாலும் அருகில் உட்காரவைத்துப் பேசிக் கொண்டிருக்க முடியும் என்பது தெரிந்தது. வந்திருந்த பிச்சைக்காரி சிரிப்பு மூட்டும்படிப் பேசுவதில் கெட்டிக்காரி போலும்! அடிக்கடி 'களுக்' 'களுக்' என்ற சப்தம் கேட்டது. என் மனைவிக்கு அவள் விழுந்து விழுந்து பணிவிடை

"Pictures make million memories"

Services Offered

- Wedding,Engagement
- Half Saree/Dhoti Ceremony
- Custom Wedding Albums
- Graduation
- House Warming
- Birthday Parties
- Baby Shower

VIP Photography

Get In Touch

https://vipphotography.us/

@VIP_PHOTOGRAPHY1720

JAGAN
+1-614-615-8596

செய்வதைக் கண்டு நானே பிரமித்து விட்டேன். என்னையே கேலிசெய்து கொள்ளும்படியாக இருந்தது, சற்றுமுன் எனக்குத் தோன்றிய பயம்.

சாயந்தரம் இருக்கும்; கருக்கல் நேரம். என் மனைவியும் அந்த வேலைக்காரியும் உட்கார்ந்து சிரித்துப் பேசியபடி கதை சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் முன்கூடத்தில் விளக்கேற்றிவிட்டு ஒரு புஸ்தகத்தைப் படிக்கும் சாக்கில் அவளைக் கவனித்தவண்ணம் இருந்தேன். நான் இருந்த ஹாலுக்கும் அவர்கள் இருந்த இடத்துக்கும் இடையில் நடுக்கட்டு ஒன்று உண்டு. அதிலே நான் ஒரு நிலைக் கண்ணாடியைத் தொங்கவிட்டு வைத்திருந்தேன். அவர்களுடைய பிம்பங்கள் அதிலே நன்றாகத் தெரிந்தன.

"நீ எங்கெல்லாமோ சுத்தி அலஞ்சு வந்திருக்கியே; ஒரு கதை சொல்லு" என்றாள் என் மனைவி.

"ஆமாம். நான் காசி அரித்துவாரம் எல்லா எடத்துக்கும் போயிருக்கிறேன். அங்கே, காசியில் ஒரு கதையைக் கேட்டேன்; உனக்குச் சொல்லட்டா?" என்றாள்.

"சொல்லேன்; என்ன கதை?" என்று கேட்டாள் என் மனைவி.

"அஞ்சுநூறு வருச மாச்சாம். காசியிலே ஒரு ராசாவுக்கு ஒத்தைக் கொரு மக இருந்தா. பூலோகத்திலே அவளெப்போல அளகு தேடிப் புடிச்சாலும் கெடெக்காதாம். அவளெ ராசாவும் எல்லாப் படிப்பும் படிப்பிச்சாரு. அவளுக்குக் குருவா வந்தவன் மகாப் பெரிய சூனியக்காரன். எந்திரம், தந்திரம், மந்திரம் எல்லாம் தெரியும். அவனுக்கு இவமேலே ஒரு கண்ணு. ஆனா இந்தப் பொண்ணுக்கு மந்திரி மவனெக் கட்டிக்கிடணும்னு ஆசை.”

"இது அவனுக்குத் தெரிஞ்சுப்போச்சு; யாருக்குத் தெரிஞ்சுபோச்சு? அந்தக் குருவுக்கு..."

என்ன அதிசயம்! நான் அவள் சொல்லிக்கொண்டிருக்கும் கதையைக் கேட்டுக்கொண்டிருக்கிறேனா அல்லது கையில் உள்ள புஸ்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிறேனா? கையிலிருப்பது

'சரித்திர சாசனங்கள்' என்ற இங்கிலீஷ் புஸ்தகம். அதிலே வாராணசி மகாராஜன் மகளின் கதை என் கண்ணுக்கெதிரே அச்செழுத்துக்களில் விறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. கையில் விரித்துவைத்த பக்கத்தில் கடைசி வாக்கியம், 'அந்த மந்திரவாதிக்கு அது தெரிந்துவிட்டது' என்ற சொற்றொடரின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு. மூளை சுழன்றது. நெற்றியில் வியர்வை அரும்பியது. என்ன, எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா! பிரித்துப் பிடித்து வைத்திருந்த பக்கத்திலேயே கண்களைச் செருகியிருந்தேன். எழுத்துக்கள் மங்க ஆரம்பித்தன.

திடீரென்று ஒரு பேய்ச் சிரிப்பு! வெடிபடும் அதிர்ச்சியோடு என் மனசை அப்படியே கவ்வி உறிஞ்சியது. அதிர்ச்சியில் தலையை நிமிர்த்தினேன். எனது பார்வை நிலைக் கண்ணாடியில் விழுந்தது. அதனுள், ஒரு கோர உருவம் பல்லைத் திறந்து உன்மத்த வெறியில் சிரித்துக் கொண்டிருந்தது. எத்தனையோ மாதிரியான கோர உருவங்களைக் கனவிலும், சிற்பிகளின் செதுக்கிவைத்த கற்பனைகளிலும் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த மாதிரி ஒரு கோரத்தைக் கண்டதே இல்லை. குரூபமெல்லாம் பற்களிலும் கண்களிலுமே தெறித்தது. முகத்தில் மட்டும் மோக லாகிரியை எழுப்பும் அற்புதமான அமைதி. கண்களிலே ரத்தப் பசி! பற்களிலே சதையைப் பிய்த்துத் தின்னும் ஆவல். இந்த மங்கலான பிம்பத்துக்குப் பின்னால் அடுப்பு நெருப்பின் தீ நாக்குகள். வசமிழந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். தோற்றம் கணத்தில் மறைந்தது; அடுத்த நிமிஷம் அந்தப் பிச்சைக்காரியின் முகமே தெரிந்தது.

"உன் பெயர் என்ன என்று கேட்க மறந்தே போயிட்டுதே" என்று மனைவி கேட்பது எனது செவிப்புலனுக்கு எட்டியது.

"காஞ்சனைன்னுதான் கூப்பிடுங்களேன். கதேலெ வர்ற காஞ்சனை மாதிரி. எப்படிக் கூப்பிட்டா என்ன! ஏதோ ஒரு பேரு" என்றாள் பிச்சைக்காரி.

என் மனைவியைத் தனியாக அங்கு விட்டிருக்க மனம் ஒப்பவில்லை. என்ன நேரக்கூடுமோ? பயம் மனசைக் கவ்விக்கொண்டால் வெடவெடப்புக்கு வரம்பு உண்டா?

நான் உள்ளே போனேன். இருவரும் குசாலாகவே பேசிக் கொண்டிருந்தனர்.

வலுக்கட்டாயத்தின் பேரில் சிரிப்பை வருவித்துக் கொண்டு நுழைந்த என்னை, "பொம்பளைகள் வேலை செய்கிற எடத்தில் என்ன உங்களுக்காம்?" என்ற பாணம் எதிரேற்றது.

காஞ்சனை என்று சொல்லிக் கொண்டவள் குனிந்து எதையோ நறுக்கிக் கொண்டிருந்தாள். விஷமம் தளும்பும் சிரிப்பு அவளது உதட்டின் கோணத்தில் துள்ளலாடியது. நான் வேறு ஒன்றும் சொல்ல முடியாமல் புஸ்தக வேலியின் மறைவில் நிற்கும் பாராக்காரன் ஆனேன். மனைவியோ கர்ப்பிணி. அவள் மனசிலேயா பயத்தைக் குடியேற்றுவது? அவளை எப்படிக் காப்பாற்றுவது?

சாப்பிட்டோம். தூங்கச் சென்றோம். நாங்கள் இருவரும் மாடியில் படுத்துக் கொண்டோம். காஞ்சனை என்பவள் கீழே முன்கூடத்தில் படுத்துக் கொண்டாள்.

நான் படுக்கையில் படுத்துத்தான் கிடந்தேன். இமை மூட முடியவில்லை. எப்படி முடியும்? எவ்வளவு நேரம் இப்படிக் கிடந்தேனோ? இன்று மறுபடியும் அந்த வாசனை வரப்போகிறதா என்று மனம் படக்கு படக்கென்று எதிர்பார்த்தது.

எங்கோ ஒரு கடிகாரம் பன்னிரண்டு மணி அடிக்கும் வேலையை ஆரம்பித்தது.

பதினோராவது ரீங்காரம் ஓயவில்லை.

எங்கோ கதவு கிரீச்சிட்டது.

திடீரென்று எனது கைமேல் கூரிய நகங்கள் விழுந்து பிறாண்டிக் கொண்டு நழுவின.

நான் உதறியடித்துக்கொண்டு எழுந்தேன். நல்ல காலம்; வாய் உளறவில்லை.

என் மனைவியின் கைதான் அசப்பில் விழுந்து கிடந்தது.

அவளுடையதுதானா?

எழுந்து குனிந்து கவனித்தேன். நிதானமாகச் சுவாசம் விட்டுக் கொண்டு தூங்கினாள்.

கீழே சென்று பார்க்க ஆவல்; ஆனால் பயம்!

போனேன். மெதுவாகக் கால் ஓசைப்படாமல் இறங்கினேன்.

ஒரு யுகம் கழிந்த மாதிரி இருந்தது.

மெதுவாக முன் கூடத்தை எட்டிப் பார்த்தேன். வெளிவாசல் சார்த்திக் கிடந்தது. அருகிலிருந்த ஜன்னல் வழியாக விழுந்த நிலா வெளிச்சம் காலியாகக் கிடக்கும் பாயையும் தலையணையையும் சுட்டிக் காட்டியது.

கால்கள் எனக்குத் தரிக்கவில்லை. வெடவெடவென்று நடுங்கின.

திரும்பாமலே பின்னுக்குக் காலடி வைத்து நடந்து மாடிப்படியருகில் வந்தேன். உயரச் சென்றுவிட்டாளோ?

விடுவிடு என்று மாடிக்குச் சென்றேன்.

அங்கே அமைதி.
பழைய அமைதி.

மனம் தெளியவில்லை.

மாடி ஜன்னலருகில் நின்று நிலா வெளிச்சத்தை நோக்கினேன்.

மனித நடமாட்டம் இல்லை.

எங்கோ ஒரு நாய் மட்டும் அழுது பிலாக்கணம் தொடுத்து ஓங்கியது.

The Gold Standard of
Ancestral Nutrition
PURE | AUTHENTIC | NUTRITIOUS
OIL SPICES AND BEYOND
SINCE 1939
KSHETRA
KSHETRA
WELLVIA
OILS
Cold Pressed Virgin | Extra Virgin
SPICES
Cryogenically Ground
RICE
Unpolished | Traditional Varieties
PULSES
Wholesome | Natural | Protein Rich
Endorsed by
Dr. PAL
Use Code
KSHETRA10
GET 10% OFF
on your First Order
+
FREE SHIPING
On order above $50
Only on
kshetrafoods.us
ENGINEERED FOR EXCELLENCE
100% Pesticide - Free & Toxin-Free Raw Materials.
Cryogenically Ground Spices to Retain Natural Aroma & Nutrients.
Extra Virgin Peanut Oil & Sesame Oil Enriched with Heart-Healthy Oleic Ccid & Natural Sesamol.
High Carotenoid Chilli Powder.
High Linalool Coriander Powder
High Curcumin Trumeric Powder.
For Local Distribution and Bulk Enquiries
Email us : sales@kshetrafoods.us | Call at : +1 703-403-1605


காஞ்சனை
இயற்றியவர்
புதுமைப்பித்தன்
தமிழ் பெட்டகம்

பிரம்மாண்டமான வௌவால் ஒன்று வானத்தின் எதிர் கோணத்திலிருந்து எங்கள் வீடு நோக்கிப் பறந்து வந்தது.

வெளியே பார்க்கப் பார்க்கப் பயம் தெளிய ஆரம்பித்தது. என்னுடைய மனப்பிரமை அது என்று நிதானத்துக்கு வந்தேன்.

ஆனால் கீழே!

மறுபடியும் பார்க்க வேண்டும் என்ற ஆவல்.

கீழே இறங்கினேன்.

தைரியமாகச் செல்ல முடியவில்லை.

அதோ! காஞ்சனை பாயில் உட்கார்ந்துதான் இருக்கிறாள். என்னைப் பார்த்துச் சிரித்தாள். விஷச் சிரிப்பு. உள்ளமே உறைந்தது. நிதானமாக இருப்பதைப் போலப் பாசாங்கு செய்து கொண்டு, "என்ன, தூக்கம் வரவில்லையா?" என்று முணுமுணுத்துக்கொண்டே மாடிப் படிகளில் ஏறினேன்.

அப்பொழுது சாம்பிராணி வாசனை வந்ததா? வந்தது போலத் தான் ஞாபகம்.

நான் எழுந்திருக்கும்போது நெடுநேரமாகிவிட்டது.

"என்ன, வரவரத்தான், இப்படித் தூங்கித் தொலைக்கிறக; காப்பி ஆறுது!" என்று என் மனைவி எழுப்பினாள்.

இருட்டுக்கும் பயத்துக்கும் ஒளிவிடம் இல்லாத பகலிலே எல்லாம் வேறு மாதிரியாகத்தான் தோன்றுகிறது. ஆனால், மனசின் ஆழத்திலே அந்தப் பயம் வேரூன்றிவிட்டது. இந்த ஆபத்தை எப்படிப் போக்குவது?

தன் மனைவி சோரம் போகிறாள் என்ற மனக்கஷ்டத்தை, தன்னைத் தேற்றிக் கொள்வதற்காக வேறு யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியுமா? அதே மாதிரிதான் இதுவும், என்னைப் போன்ற

ஒருவன், ஜன சமுதாயத்துக்காக இலக்கிய சேவை செய்கிறேன் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் ஒருவன், "ஸார், எங்கள் வீட்டில் புதுசாக ஒரு பேய் குடிவந்துவிட்டது. அது என் மனைவியை என்ன செய்யுமோ என்று பயமாக இருக்கிறது; ஆபத்தைப் போக்க உங்களுக்கு ஏதாவது வழி தெரியுமா?" என்று கேட்டால், நான் நையாண்டி செய்கிறேனா அல்லது எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்றுதான் சந்தேகிப்பான். யாரிடம் இந்த விவகாரத்தைச் சொல்லி வழி தேடுவது? எத்தனை நாட்கள் நான் பாராக் கொடுத்துக் கொண்டிருக்க முடியும்?

இது எந்த விபரீதத்தில் கொண்டு போய் விடுமோ? சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தேன். என் மனைவிக்கு அந்தப் புதிய வேலைக்காரி என்ன சொக்குப்பொடி போட்டுவிட்டாளோ? அவர்கள் இருவரும் மனசில் துளிக்கூடப் பாரமில்லாமல் கழித்துவிட்டார்கள்.

இன்றைப் பார்த்துப் பகலும் இராத்திரியை விரட்டிக் கொண்டு ஓடி வந்தது. இவ்வளவு வேகமாகப் பொழுது கழிந்ததை நான் ஒரு நாளும் அனுபவித்ததில்லை.

இரவு படுக்கப் போகும்போது என் மனைவி, "காஞ்சனை, இன்றைக்கு மாடியிலேயே நமக்கு அடுத்த அறையில் படுத்துக் கொள்ளப் போகிறாள்" என்று கூறிவிட்டாள். எனக்கு மடியில் நெருப்பைக் கட்டியது போல ஆயிற்று.

இது என்ன சூழ்ச்சி!

இன்று தூங்குவதே இல்லை. இரவு முழுவதும் உட்கார்ந்தே கழிப்பது என்று தீர்மானித்தேன்.

"என்ன படுக்கலியா?" என்றாள் என் மனைவி.

"எனக்கு உறக்கம் வரவில்லை" என்றேன். மனசுக்குள் வல் ஈட்டிகளாகப் பயம் குத்தித் தைத்து வாங்கியது.

"உங்கள் இஷ்டம்" என்று திரும்பிப் படுத்தாள். அவ்வளவுதான். நல்ல தூக்கம்; அது வெறும் உறக்கமா?

நானும் உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்துப் போனேன்.

சற்றுப் படுக்கலாம் என்று உடம்பைச் சாய்த்தேன்.

பன்னிரண்டு மணி அடிக்க ஆரம்பித்தது.

இதென்ன வாசனை!

பக்கத்தில் படுத்திருந்தவள் அமானுஷ்யக் குரலில் வீரிட்டுக் கத்தினாள். வார்த்தைகள் ரூபத்தில் வரும் உருவற்ற குரல்களுக்கு இடையே காஞ்சனை என்ற வார்த்தை ஒன்றுதான் புரிந்தது.

சட்டென்று விளக்கைப் போட்டுவிட்டு அவளை எழுப்பி உருட்டினேன்.

பிரக்ஞை வரவே, தள்ளாடிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். "ஏதோ ஒன்று என் கழுத்தைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சின மாதிரி இருந்தது" என்றாள் கண்களைத் துடைத்துக் கொண்டு.

கழுத்தைக் கவனித்தேன். குரல்வளையில் குண்டூசி நுனி மாதிரி ரத்தத்துளி இருந்தது. அவள் உடம்பெல்லாம் நடுங்கியது.

"பயப்படாதே; எதையாவது நினைத்துக் கொண்டு படுத்திருப்பாய்" என்று மனமறிந்து பொய் சொன்னேன்.

அவள் உடம்பு நடுநடுங்கிக் கொண்டிருந்தது. மயங்கிப் படுக்கையில் சரிந்தாள். அதே சமயத்தில் வெளியில் சேமக்கலச் சபதம் கேட்டது.

கர்ணகடூரமான குரலில் ஏதோ ஒரு பாட்டு.

அதிகாரத் தோரணையிலே, "காஞ்சனை! காஞ்சனை!" என்ற குரல்.

என் வீடே கிடுகிடாய்த்துப் போகும்படியான ஓர் அலறல்! கதவுகள் படபடவென்று அடித்துக் கொண்டன.

அப்புறம் ஓர் அமைதி. ஒரு சுடுகாட்டு அமைதி.

நான் எழுந்து வெளிவாசலின் பக்கம் எட்டிப் பார்த்தேன்.

நடுத்தெருவில் ஒருவன் நின்றிருந்தான். அவனுக்கு என்ன மிடுக்கு!

"இங்கே வா" என்று சமிக்ஞை செய்தான்.

நான் செயலற்ற பாவை போலக் கீழே இறங்கிச் சென்றேன்.

போகும்போது காஞ்சனை இருந்த அறையைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. நான் எதிர்பார்த்தபடியேதான் இருந்தது. அவள் இல்லை.

தெருவிற்குப் போனேன்.

"அம்மா நெத்தியிலே இதைப் பூசு. காஞ்சனை இனிமேல் வர மாட்டாள். போய் உடனே பூசு. அம்மாவை எழுப்பாதே" என்றான்.
விபூதி சுட்டது.

நான் அதைக் கொண்டுவந்து பூசினேன், அவள் நெற்றியில். அது வெறும் விபூதிதானா! எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. அவன் கையில் சேமக்கலம் இல்லை என்பதும் ஞாபகம் இருக்கிறதே!

மூன்று நாட்கள் கழிந்துவிட்டன.

காலையில் காப்பி கொடுக்கும்போது, "இந்த ஆம்பிளைகளே இப்படித்தான்!" என்றாள் என் மனைவி. இதற்கு என்ன பதில் சொல்ல?

- புதுமைப்பித்தன்

கண்ணும் கண்ணும் நோக்கினால்...!

பெ. தனலட்சுமி ஆறுமுகம்

சந்தோசத்தில் உடலும் மனமும்
பூத்துக் குலுங்கும்...

உதடுகளில் புதிதாக
மெல்ல மௌனம் வரும்...

பேசாத வார்த்தைகளில்
ஆயிரம் கதைகள் இருக்கும்....

சொல்லாத சொல்லுக்குக்
கனம் மிகக் கூடும்....

பார்க்கின்ற கண்கள் நூறு
காவியங்கள் பாடும்....

இன்ப நாடகங்கள்
அத்தனையும்
கனவுகளில் அரங்கேறும்....

நான்கு கண்கள்
ஒற்றைப் பார்வை என்றாகும்....

அறிவியலும் அசந்திடும்
அமுதமும் அங்கே கசந்திடும்....

நெஞ்சுக்குள்ளே உயிர்க் குருவிகள்
அசுரப் பருந்தாகும்....

நிலைத்தப் பார்வைகள்
இதயம் துளைத்து
ஊடுருவும்....

உயிர்களும் இரண்டல்ல
என்றுமே ஒன்றெனச் சொல்லும்....

அந்தக் காதல் தியானத்தில்
மோட்சம் தெரியும்....!!

பிறக்கும் போது இல்லை,
வளரும் போது வரும்,
மறையும் போது மறையும் — அது என்ன?
👉 பதில்: நிழல்

பெல்காம் நினைவலைகள்

சந்திரா வெள்ளையப்பன்

எல்லோருக்கும் வணக்கம்
உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி.

கொஞ்சி விளையாடும் குழந்தைகள் முதல், கைபிடித்து நடத்திச் செல்லும் முதுமை வரை—எல்லா வயதினரும் கலந்து கொண்ட உறவினர்களின் இனிய உலா இது.

கோவை – பெங்களூரு – பெல்காம்... ஒரு திருமண வைபவத்திற்காக மேற்கொண்ட பயணம். ஆனால், எங்களது உணர்வு அது ஒரு மகிழ்ச்சியான உல்லாசப் பயணம் போல் இருந்தது.

பறவைகள் பல விதம்; ஒவ்வொன்றும் தனித்தன்மை கொண்டவை. அதுபோலவே நாங்கள் முப்பது பேரும் பல விதமானவர்கள். ஆனால், அந்த மூன்று நாட்களில் எங்களின் மனங்கள் ஒன்றாக இணைந்தன. அதுவே இந்தப் பயணத்தை மறக்க முடியாத அனுபவமாக மாற்றியது.

கோவை இரயில்வே நிலையத்தில் சந்தித்த அந்தத் தருணம்... அடடா!

ஒவ்வொருவரின் முகத்திலும் மகிழ்ச்சி ஒளி. கண்களில் ஒளிவட்டம். நாக்குகள் நர்த்தனம் ஆட, முன்பக்கத்தில் இருக்கும் 32 பற்கள் குலுங்கிக் குலுங்கி வெளியில் பார்க்க, அந்த 32 பேரையும் அடக்கி ஆளும் இரண்டு இதழ்கள் படும் பாடு! ஒருவரையொருவர் அன்புடன் அணைத்துக் கொள்ளும் காட்சி—பார்த்தவர்களுக்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

எல்லோருக்கும் ஒரே கம்பார்ட்மெண்ட். அதுவே போதுமான மகிழ்ச்சி!இளைஞர்கள் பொதிகளை ஏற்ற, மற்றவர்கள் ஆர்வத்துடன் ஏறினர். வடகிழக்கை நோக்கிச் செல்லும் இரயில் எங்கள் உற்சாகத்தையும் ஆரவாரத்தையும் அமைதியாக ரசித்துக்கொண்டு பயணித்தது—ஏனெனில் அது A/C கோச்.

அந்த மூன்று நாட்களில் நாங்கள் முப்பது வருடங்கள் பின்சென்று விட்டோம் போல.அந்தாக்ஷரி, பாட்டுக்குப் பாட்டு, தம்போலா, சீட்டு—இவ்வாறான பல விளையாட்டுகளால் நேரம் எப்படிச் சென்றது எனவே தெரியவில்லை. சிறிது நேரத்தில் பெங்களூரு ரயில் நிலையம் வந்துவிட்டது.

ஒரு ரிசார்ட்டில் இருந்து வெளியே வருவது போல, களைப்பில்லாமல் பட்டாம்பூச்சிகளைப் போல வெளியே இறங்கினோம். அடுத்த இலக்கு—பெல்காம் (இன்றைய பெயர் பெல்காவி).

★ Delicious & Tasty Menu ★

Indian Cuisine

Triveni EXPRESS

indian Cafe & Bakery

TRIVENIEXPRESS.COM

7668 SAWMILL RD, DUBLIN, OH 43016

கர்நாடக மாநிலத்தில், மகாராஷ்டிரா எல்லைக்கு அருகில் அமைந்துள்ள அழகான நகரம் அது. அடுத்த ரயில் வர இன்னும் ஐந்து மணி நேரம். சின்ன நிலையம் என்பதால் பிளாட்பாரத்தில் நாங்களே அதிகம். “என் பெண்டாட்டி ஊருக்கு போயிட்டா” என்று குதூகலிக்கும் ஜனகராஜ் போல, விளையாட இடம் கிடைத்ததென்று நம்மவர்கள் துள்ளித் துள்ளி மகிழ்ந்தனர். ஐந்து மணி நேரம் ஐந்து நிமிடமாகவே தெரிந்தது.

இரவு 7 மணிக்கான ரயிலில் ஏறி, இரவு உணவை முடித்தவுடன் அனைவரும் தங்களது படுக்கைகளில் சாய்ந்தனர். பயணக் களைப்பில் இனிய கனவுகளுடன் தூங்கி, காலையில் 7 மணிக்கு பெல்காவியை அடைந்தோம். அங்கிருந்து தயாராகி, இரண்டு மினி பஸ்களில் நகரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம்.

பெல்காவி நகரம், அளவில் கோவைக்கு ஒப்பானதாக இருந்தாலும், மக்கள் தொகை குறைவு. நகரமெங்கும் பெரிய மரங்கள் சூழ்ந்த பசுமை. அதிக வெயிலும் இல்லை, கடும் குளிரும் இல்லை—நடுநிலை வானிலை ஆண்டு முழுவதும் நிலவுகிறது எனக் கூறினார்கள். மராட்டியர்கள் அதிகம் வசிக்கும் பகுதி. இங்கிருந்து கோவா, புனே போன்ற நகரங்களும் அருகிலேயே உள்ளன.

முகலாயர் காலத்தில் நமது இராணுவ வீரர்கள் கட்டியதாகச் சொல்லப்படும் மிலிட்டரி சிவன் கோயில், மிலிட்டரி துர்கா கோயில் ஆகியவற்றைப் பார்த்தோம்.

ஆயிரம் ஆண்டுகள் பழமையான ஜெயின் கோயில் அதன் சிற்ப வேலைப்பாடுகளால் வியப்பூட்டியது. ஜெயின் மகாவீர் சந்நிதியில் ஒரு தனித்த ஆன்மிக அதிர்வு இருந்தது என்று சிலர் உணர்ந்தனர்.

பின்னர் ராமகிருஷ்ணா ஆலயத்திற்கும் சென்று வந்தோம். நகரத்தில் பெரிய சுற்றுலா இடங்கள் இல்லாவிட்டாலும், அமைதியும் அழகும் நிறைந்த ஒரு நகரமாக அது தோன்றியது. தாகம் தீர அனைவரும் இளநீர் அருந்தி, மீண்டும் தங்கியிருந்த அறைகளுக்குத் திரும்பி, சிறிது ஓய்வு எடுத்தோம்.

அதற்குப் பிறகு மீண்டும் அரட்டை, சிரிப்பு, விளையாட்டு— இப்படியே மகிழ்ச்சி நிரம்பிய நேரங்கள். திருமண நிகழ்ச்சியும் கனவுலகில் நடந்ததுபோல் இனிமையாக முடிந்தது.

திருமணம் முடிந்தவுடன் சிலர் கோவா சென்றனர். மீதமுள்ளவர்கள் இரவு பெல்காவியிலிருந்து கிளம்பி, மறுநாள் காலை பெங்களூரை அடைந்தோம். அங்கு 7 மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. இம்முறை அந்த 7 மணி நேரம் 70 மணி நேரம் போலவே தோன்றியது! “என் பெண்டாட்டி வந்துவிட்டாள்” என்ற ஜனகராஜின் சோகக் குரல் எங்கோ காதில் ஒலித்தது போல இருந்தது.

என் வாழ்க்கையில் இது சிறிய பயணம் தான். ஆனால் நினைவில் என்றும் நிலைத்திருக்கும் மறக்க முடியாத பயணமாக அது மாறிவிட்டது.

சித்திரம்

கனுஜா கெங்கா ஆனந்த்

ஸ்மிருத்திகா அருண்பாபு

அக்சிதா ஹர்ஷி.J.S


YAMAHA
YAS-26
Eb Alto
Saxophone

Levi's

விக்ரந்த் சுதாகர்




STAR WARS
Imperial
STAR DESTROYER

கொலம்பஸ் தமிழ்ச் சங்கச் செய்திகள்

நம் அனைவரையும், இந்தச் சாரல் இதழையும் ஒருங்கிணைக்கும் வெள்ளி விழா கண்ட கொலம்பஸ் தமிழ்ச் சங்கத்தின் கடந்த ஆண்டு ஜூன் முதல் இந்த ஆண்டு மார்ச் மாதம் வரையிலான நிகழ்வுகளின் தொகுப்பைக் காணலாம்.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் சங்கத்தின் நிர்வாகக் குழு (செயற்குழு) உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்களின் விபரங்கள் இதோ:

புதிய பொறுப்பாளர்கள்

தலைவர் (பிரசிடெண்ட்)
லாவண்யா ராமு

பொருளாளர் (டிரெஷரர்)
சதீஷ் பாபு ராமச்சந்திரன்

செயலாளர் (செக்ரெட்டரி)
நிர்மலா நடராஜன்

டிஜிட்டல் ஒருங்கிணைப்பாளர்
சதீஷ் ராஜ்

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
ஜானு இசக்கிராஜ்மோகன்

விளையாட்டு ஒருங்கிணைப்பாளர்
அனு கணேஷ்

பண்பாடு மற்றும் கலைப் போட்டிகள் ஒருங்கிணைப்பாளர்
பாலசுப்ரமணியன் சசிகலா நெடுஞ்செழியன்

தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளர்
சங்கீதா ராஜேஷ்

மக்கள் தொடர்பு
விஜிதா பத்மநாதன்

ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்
தனசீலன் காளிமுத்து
மதிவதனி சாந்தி ஈஸ்வரன்
ஜெகதீஸ்வரன் கணேசன்

புதிய உறுப்பினர்கள் பொறுப்பேற்ற பின் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு பார்வை:

இது ஒரு பொன்மாலைப் பொழுது

ஜூலை 2025ல் “இது ஒரு பொன்மாலைப் பொழுது” நிகழ்ச்சி நன்முறையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி 55 வயதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள், இங்கு வந்துள்ள பெற்றோர்கள் மற்றும் பெரியோர்களுக்கான பிரத்யேக நிகழ்ச்சியாகும். அவர்களுக்கான பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. திருமதி. கஞ்சன் அம்ப்வானி அவர்கள் மூச்சுப் பயிற்சியுடன் கூடிய எளிய யோகா பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தார். பின்னர் தேநீர் மற்றும் சிற்றுண்டியுடன் அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்தனர்.

<u>கோடைக்கால மகிழ்வுலா</u>

செப்டம்பர் 2025ல் கொலம்பஸ் தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கான கோடைக்கால மகிழ்வுலா நடத்தப்பட்டது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் உறுப்பினர்கள் பலரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். சிறுவர்களுக்கான மரக்கறி செதுக்கல், பெரியவர்களுக்கான இனிப்பு வகைகள் மற்றும் தீயின்றிச் சமையல் செய்தல் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், சிலம்பம் சுற்றுதல், கடைகள் மற்றும் சிறுதொழில்க் கூடங்களின் கண்காட்சியும் நடைபெற்றன.

கோடைக்கால மகிழ்வுலாவில் இளைஞர் குழுவினரின் பங்களிப்புப் புகைப்படம்

சதுரங்கப் பந்தயம்

நவம்பர் 2025ல் கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் சதுரங்கப் போட்டிகள் நடத்தியது. இதில் பல்வேறு பிரிவுகளில் சிறார்களுக்குப் போட்டிகள் நடத்தப்பட்டன.
8 வயதிற்கு உட்பட்டோர், 8-12 வயது, 12-16 வயது மற்றும் 16 வயதிற்கு மேற்பட்டோர் எனப்பட்ட பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மகளிர் (பெண்கள்) இரவு

ஜனவரி 2026ல் மகளிருக்கான சிறப்பு நிகழ்ச்சியாக, இரவு விருந்துடன் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள், மகளிருக்கான அழகு நயப்புக் காட்சி (fashion show), கேளிக்கைப் போட்டிகள் நடத்தப்பட்டன. பெண்கள் பலரும் இதில் உற்சாகமாகத் தங்கள் தோழிகளுடன் கலந்துகொண்டு மகிழ்ந்தனர்.

ஓவியப் போட்டி

ஜனவரி 2026ல் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான ஓவியப் போட்டிகள் நடைபெற்றன. குழந்தைகளின் கைவண்ணத்தில் அழகிய ஓவியங்கள் மற்றும் கலை வண்ணமிக்க படைப்புகள் மனதைக் கவர்ந்தன. பெரியவர்கள் சிலரும் இப்போட்டியில் ஆர்வமாகப் பங்கேற்று, அவர்களின் கண்கவர் ஓவியங்களைப் படைத்தனர்.

4-6, 7-9, 10-12, 13-18 வயது மற்றும் 18 வயதிற்கு மேற்பட்டோர் என்ற பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு 1,2,3 ஆம் இடங்களில் தேர்வான ஓவியங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

ஓவியப் போட்டி

ஜனவரி 2026ல் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான ஓவியப் போட்டிகள் நடைபெற்றன. குழந்தைகளின் கைவண்ணத்தில் அழகிய ஓவியங்கள் மற்றும் கலை வண்ணமிக்க படைப்புகள் மனதைக் கவர்ந்தன. பெரியவர்கள் சிலரும் இப்போட்டியில் ஆர்வமாகப் பங்கேற்று, அவர்களின் கண்கவர் ஓவியங்களைப் படைத்தனர்.

4-6, 7-9, 10-12, 13-18 வயது மற்றும் 18 வயதிற்கு மேற்பட்டோர் என்ற பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு 1,2,3 ஆம் இடங்களில் தேர்வான ஓவியங்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

தமிழர் திருநாள் கொண்டாட்டம்

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பிப்ரவரி 2026ல் கலை மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் இசை, பரதநாட்டியம், கிராமிய நடனம், சினிமா நடனம், பறை ஆட்டம், சிலம்பம் சுற்றுதல், கேளிக்கை நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நிகழ்ச்சிகளில் சிறியோர் முதல் பெரியோர் வரை கலந்து கொண்டு மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக டாக்டர். பால் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். ஜனரஞ்சகமாகவும், மிகுந்த வேடிக்கையாகவும் அவர் உடல் நலத்தைப் பற்றியும் அதனைப் பேணிக்காப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றியும் 10 விதிகளை அனைவரின் மனதிலும் பதியுமாறு எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சி பெரும் வரவேற்பைப் பெற்றது.

பல்வேறு கடைகள் மற்றும் சிறுதொழில்க் கூடங்களின் கண்காட்சியும் இருந்தது. உணவுப் பொருட்கள், ஆடை, ஆபரணங்கள் முதலானவையும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

புதிய செயற்குழு உறுப்பினர்களின் அறிமுகமும், கடந்த ஆண்டு உறுப்பினர்களுக்கு நன்றி நவில்தலும் நடைபெற்றன. கொலம்பஸ் தமிழ்ப்பள்ளியின் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. சதுரங்கப் பந்தயம் மற்றும் ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.
இரவு விருந்து விநியோகத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

திருக்குறள் மற்றும் ஆத்திச்சூடி போட்டி

மார்ச் 2026ல் மாணவர்களுக்கான திருக்குறள் மற்றும் ஆத்திச்சூடி போட்டிகள் நிகழ்த்தப்பட்டன. நமது பண்பாட்டை மேம்படுத்தவும், நமது இலக்கியங்களின் மகத்துவத்தை இக்கால மாணவ மாணவியர்க்கு உணர்த்தவும் இந்தப் போட்டியில் பங்கெடுக்கும் அனைவருக்கும் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது. இப்போட்டியில் பல்வேறு பிரிவுகளில் மாணவ மாணவியர் பங்கேற்று திருக்குறள், ஆத்திச்சூடி மற்றும் அவைகளின் விளக்கத்தையும் மனப்பாடமாக உரைத்துப் பாராட்டுகளைப் பெற்றனர்.

Thank You
YOUTH COMMITTEE
You all played a key role for the success of this event
CTS THANKS YOU FOR YOUR TIME, EFFORT AND COMMITMENT

குதிரைவாலி உப்புமா

சரண்யா தேவி ராமமூர்த்தி

குதிரைவாலி (Barnyard Millet) என்பது பல்வேறு வகைகளில் பயன்படுத்தக்கூடிய ஊட்டச்சத்து மிக்க சிறுதானியம். இதில் புரதம் மற்றும் நார்ச்சத்து அதிகமாக உள்ளதால், உடல் எடையை கட்டுப்படுத்த உதவுகிறது.

சமையல் நேரம்: 20 நிமிடங்கள்

தேவையான பொருட்கள்

- எண்ணெய் – 1 டேபிள் ஸ்பூன்
- குதிரைவாலி – 1 கப்
- கடுகு – 1/2 டீஸ்பூன்
- உளுத்தம் பருப்பு – 1/2 டீஸ்பூன்
- கடலை பருப்பு – 1 டீஸ்பூன்
- கறிவேப்பிலை – 10 இலைகள்
- வெங்காயம் – 2
- பச்சை மிளகாய் – 3
- தக்காளி – 1
- பட்டாணி – 1/2 கப்
- தண்ணீர் – 2 கப்
- உப்பு – தேவைக்கேற்ப
- கொத்தமல்லி இலை – ஒரு கைப்பிடி

செய்முறை

1. முதலில் குதிரைவாலியை நன்றாக கழுவி வடிகட்டி வைக்கவும்.
2. பிரஷர் குக்கரில் எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு, உளுத்தம் பருப்பு, கடலை பருப்பு மற்றும் கறிவேப்பிலை சேர்த்து தாளிக்கவும்.
3. பின்னர் வெங்காயம், பச்சை மிளகாய், தக்காளி சேர்த்து நன்றாக வதக்கவும்.
4. அதில் பட்டாணி மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறவும்.
5. இப்போது குதிரைவாலி மற்றும் தண்ணீர் சேர்த்து நன்றாக கலக்கவும்.
6. குக்கரை மூடி, சிம்மில் 15 நிமிடங்கள் அல்லது 1 விசில் வரும் வரை வேகவிடவும்.
7. ஆவி அடங்கிய பிறகு திறந்து மெதுவாக கிளறவும்.
8. மேலே கொத்தமல்லி தூவி பரிமாறவும்.

தேங்காய் சட்னி அல்லது தக்காளி சட்னியுடன் பரிமாறினால் மிகவும் சுவையாக இருக்கும்.

வேர்களும் விழுதுகளும்: இரு உலகங்களுக்கு இடையில் வளர்கின்ற இந்திய இளம் தலைமுறை

ஜெகதீஸ்வரன் கணேசன்

அமெரிக்காவில் வளரும் இந்தியப் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்குமிடையேயான மனச் சவால்களும் அதற்கான தீர்வும்.

இன்றைய சூழலில், பல இந்தியக் குடும்பங்கள் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இந்தியாவில் பிறந்து வளர்ந்த பெற்றோர்கள் மற்றும் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த குழந்தைகள் இடையிலான கலாச்சார
மனநிலை வேறுபாடுகள்:

கலாச்சார வேறுபாடு – ஒரு இயல்பான சவால்

பெற்றோர்கள் இந்தியக் கலாச்சாரம், பாரம்பரியம், குடும்ப மதிப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தவர்கள். ஆனால், குழந்தைகள் அமெரிக்க வாழ்க்கை முறையில், தனிநபர் சுதந்திரம், திறந்த சிந்தனை, சமத்துவம் போன்ற மதிப்புகளுடன் வளர்கின்றனர். இதனால் சில சமயங்களில் கருத்து முரண்பாடுகள் உருவாவது இயல்பானதே.

பெற்றோர்களின் எதிர்பார்ப்புகள்

இந்தியப் பெற்றோர்கள் பொதுவாக:

- மரியாதை மற்றும் ஒழுக்கம் முக்கியம் என்று
- நினைப்பார்கள்
- கல்வி மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் தருவார்கள்.
- பாரம்பரிய விழாக்கள், மொழி, உணவு முறைகளைக் குழந்தைகள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புவார்கள்

குழந்தைகளின் பார்வை

அமெரிக்காவில் வளர்ந்த இளம் தலைமுறை:

- தனிப்பட்ட விருப்பங்களுக்கும் சுதந்திரத்திற்கும் முக்கியத்துவம் தருகிறார்கள்
- நண்பர்கள், பள்ளிச் சூழல் ஆகியவற்றின் தாக்கத்தில் புதிய வாழ்க்கை முறைகளை ஏற்றுக்கொள்கிறார்கள்
- சமயங்களில் பெற்றோர்களின் கட்டுப்பாடுகளை விரும்புவதில்லை.

மோதல்கள் எங்கு ஏற்படுகின்றன?

- **மொழி**: குழந்தைகள் ஆங்கிலத்தில் சரளமாக இருப்பார்கள்; தமிழ் அல்லது தாய்மொழியில் குறைந்த ஈடுபாடே இருக்கும்.
- **வாழ்க்கை முறை**: உடை, நண்பர்கள், சமூகப் பழக்கங்கள்
- **திருமணம், உறவுகள்**: பெற்றோர்களின் பாரம்பரிய எதிர்பார்ப்புகள் vs குழந்தைகளின் சுய தேர்வுகள்
- **சுதந்திரம் vs கட்டுப்பாடு**: வெளியே செல்லுதல், நேரக் கட்டுப்பாடு போன்றவை

இளம் தலைமுறை இந்தியக் கலாச்சாரத்தை ஏற்கிறதா?
இது முழுமையாகக் குழந்தையின் வளர்ப்புச் சூழல் மற்றும் பெற்றோர்களின் அணுகுமுறையைப் பொறுத்தது.

- சில குழந்தைகள் தங்கள் வேர்களை அறிந்து கொள்ள ஆர்வமாக இருப்பார்கள்
- இந்தியத் திருவிழாக்கள், உணவு, இசை, நடனம் ஆகியவற்றில் ஈடுபடுவார்கள்
- மற்றவர்கள் முழுமையாக அமெரிக்க கலாச்சாரத்தில் கலந்து கொள்ள விரும்பலாம்

சமநிலையை எப்படி உருவாக்கலாம்?
இந்த சவால்களை சமாளிக்க:

- **திறந்த உரையாடல் முக்கியம்** – பெற்றோர்களும் குழந்தைகளும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும்
- **கலாச்சாரத்தைக் கட்டாயப்படுத்தாமல் அறிமுகப்படுத்துதல்**
- **இரு கலாச்சாரங்களையும் இணைக்கும் முயற்சி** – “Indian values + American freedom”
- **உறவு முன்னிலை** – கட்டுப்பாட்டை விட நம்பிக்கை முக்கியம்

தீர்வு
வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடும்பங்களில் கலாச்சார வேறுபாடு ஒரு சவாலாக இருந்தாலும், அது ஒரு பெரிய வாய்ப்பும் கூட.

இரண்டு உலகங்களின் சிறந்த அம்சங்களை இணைத்து வளர்ந்த இளம் தலைமுறை, எதிர்காலத்தில் உலகளாவிய பார்வையுடன் சமூகத்திற்குப் பெரிய பங்களிப்பு செய்யக்கூடியவர்கள்.

பெற்றோர்களும் குழந்தைகளும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நடக்கும் போது, இந்த வேறுபாடுகள் பலவீனமாக அல்ல, பலமாக மாறும்.

சிங்கப்பூரில் தமிழ் மொழி

சிங்கப்பூரில் தமிழ், ஆங்கிலம், மலாய், சீனம் ஆகியவற்றுடன் சேர்ந்து அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றாக உள்ளது. பள்ளிகளில் தமிழ் மூலமொழியாக கற்பிக்கப்படுவதுடன், ஊடகங்கள் மற்றும் பொது இடங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. பள்ளிகளில் தமிழ், மூல மொழி பாடமாக கற்பிக்கப்படுகிறது. தமிழ் மொழி சிங்கப்பூரில் தனது மரபையும் அடையாளத்தையும் காக்கும் வகையில் வளர்ந்து வருகிறது.

நீட்டு கூட்டு மடக்கு பெருக்கு !
சுலபக் கணக்குச் சூத்திரம்.

நடராஜன் முத்துசாமி

5க்கும் மேலுள்ள எண்களைப் பெருக்க இந்த முறை பயன்படுகிறது.

உதாரணமாக 7 ஐயும் 8 ஐயும் பெருக்க வேண்டும் என எடுத்துக் கொள்வோம்.

7 ஐயும் 8 ஐயும் பெருக்கினால் 56 .இதில் இரண்டு எண்களிலும் 5 ஐ கழித்து விடுங்கள். 7 ல் மீதமுள்ள எண் 2. இதற்கு சமமாக ஒரு கையில் இரண்டுவிரல்களை நீட்டிக் கொள்ளுங்கள்.

அடுத்த கையில், 8 என்ற எண்ணிற்கு 5ஐ கழித்து விட்டு மீதியுள்ள 3ற்கு

இப்போது இரு கைகளிலும் நீட்டியுள்ள விரல்களின் எண்ணிக்கை 5. அதாவது இது பத்தாவது ஸ்தான எண் 5.

தற்போது மடங்கியுள்ள விரல்களைக் கவனியுங்கள், ஒரு கையில் இரண்டு விரல், மற்றொரு கையில் 3 விரல்கள். இரண்டையும் பெருக்கினால் 6. இது ஒன்றாவது ஸ்தான எண்.

இரண்டையும் இணைத்தால் 56.

அதாவது நீட்டிய விரல்களைக் கூட்டு, மடக்கிய விரல்களைப் பெருக்கு என்பது தான் நீட்டு கூட்டு மடக்கு பெருக்கு சூத்திரம்.

DevCare solutions

பெண் பாதுகாப்பு

ஜெ. பார்வதி

மாதரைப் பேணுதல்
மேதகு பொறுப்பு
மதிப்போம் யாவரும்
மேதினியின் சிறப்பு
வேதனை கொடுப்பதை
வேள்வியில் எரித்தால்
வேந்தனின் வீரன்
அவளிடம் பிறக்கும்..

சூழும் சமூகம்
சுதந்திரம் கொடுத்தால்
ஆளும் திறமை
ஆலாய் வளரும்
நீளும் வாழ்க்கை
சிறப்புற அமையும்
நாளும் நலமென
நங்கையை காத்திட..

ஒருவர் மட்டும்
பேணுதல் முறையோ?
ஒவ்வொரு மனிதரும்
ஒதுங்குதல் சரியோ?

இருளைக் கடக்கும்
இவளின் மனதில்
இதயத் துடிப்பு
இருமடங்காகும்..

பெண்ணின் காப்பு
ஆணின் கடமை
மண்ணில் பிறந்த
மானுடன் நினைத்தால்
கன்னியும் இங்கு
கண்ணியம் பெறுவாள்
கண்ணீர் கடந்து
காரியம் புரிவாள்..

அச்சம் தவிர்த்து
அடியெடுத்து வைக்க
உச்சி நிலவும்
உற்றுப் பார்க்க
இச்சை எதுவும்
இதயம் மறுக்க
இயைந்து நடந்தே
நம்பிக்கை கொடுப்போம்..

ஆணின் வர்க்கம்
அனைத்தும் பொறுப்பு
ஆதிரை அவளைக்
காத்திடில் சிறப்பு
காணும் கண்ணில்
கருணை சொரிய
ஆணின் மனதில்
தாய்மை மலரும்..

வசந்தகால சாரல்

சந்திரா வெள்ளையப்பன்

சொட்டு சொட்டாக மனதைத் தொட்டு விழும் மழைத்துளிகள் போல, வாழ்க்கையின் சில தருணங்கள் அமைதியாக வந்து மனதை நனைத்துவிடுகின்றன. அந்த மென்மையான மழைத்துளிகள்தான் சாரல். சில நேரங்களில் அந்த சாரல் பெருவெள்ளமாக மாறி நிலத்தையும் மனதையும் பசுமையாக்கும்.

அனைத்து பருவங்களையும் தன்னுள் தாங்கி நிற்கும் அமெரிக்க நாட்டின் கொலம்பஸ் நகரிலும் அத்தகைய ஒரு இனிய சாரல் வீசுகிறது. தாய்நாட்டை மறக்காமல், பாரம்பரிய விழாக்களைப் பேணி, மொழிக்குக் கண்ணியம் அளித்து வாழும் நம் மக்கள்—அவர்கள் உருவாக்கிய கலாச்சாரப் பாசமும் அன்பும் சேர்ந்து ஒரு மென்மையான சாரலாக மனங்களைத் தொட்டுச் செல்கின்றன.

சாரலை விரும்பாதவர்கள் யாரிருக்க முடியும்?
அந்த இனிய சாரலுக்கு எங்களது அன்பான வாழ்த்துகள்.
சாரல் வளர்ந்து செழித்து மழையாகப் பொழியட்டும்.

ஒரு சிறிய கிராமத்தில் நல்ல கல்வியறிவு கொண்ட பெற்றோரின் அன்பில் பிறந்து வளர்ந்தேன். பின்னர் நகரத்தில் கல்வி கற்று, நல்ல குடும்பத்தில் திருமணம் செய்து கொண்டேன். கனிவும் கருணையும் நிறைந்த கணவர், முத்தான மூன்று குழந்தைகள், அன்பான மருமகள்கள், மருமகன், பேரன்பு பொழியும் பேரன்-பேத்திகள்—இவ்வளவு அருள்பெற்ற வாழ்க்கையை நான் வாழ்ந்து வருகிறேன்.

இவ்வளவு இனிமையான வாழ்க்கையை நான் பெற்றது, என் முற்பிறவியில் செய்த புண்ணியங்களின் பலனாகவே நினைத்து மகிழ்ந்தேன்.

ஆனால் வாழ்க்கை என்பது ஒரே நிறத்தில் மட்டும் வரையப்படுவதில்லை. புண்ணியத்துக்கு எதிர்மறையாக கர்மாவும் இருக்க வேண்டாமா?

அதன் விளைவாக கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாக மூட்டுத் தேய்மானம் (Osteoarthritis) எனும் வலி என்னைத் தொடர்ந்து வந்தது. மருத்துவர்கள் இதை பரம்பரை காரணமாக இருக்கலாம் என்றார்கள். அந்த அனுபவத்தைப் பற்றி மற்றவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில், என் வாழ்க்கை அனுபவங்களை இங்கே ஒரு சாரலாகப் பகிர்கிறேன்.

பொதுவாக மூட்டுவலி முதிய வயதில் வரும் என்று கூறுவர். ஆனால் சில சமயங்களில் அது இளமையிலேயே தோன்றிவிடும். எனக்கும் அவ்வாறே நடந்தது. இரண்டாவது குழந்தை பிறந்து மூன்று மாதங்கள் ஆனபோது, வலது கைவிரல் மூட்டுகளில் திடீரென வீக்கமும் தாங்க முடியாத வலியும் ஏற்பட்டது. குறிப்பாக குளிர்கால இரவுகளில் அந்த வலி மிகவும் தாங்க முடியாததாக இருந்தது. ஒரு டம்ளர் கூட கையில் பிடிக்க முடியாத நிலை.

மருத்துவரிடம் சென்றபோது, “முன்னோர்களில் யாருக்காவது ஆர்த்ரைட்டிஸ் இருந்ததா?” என்று கேட்டார்கள். முழுமையான குணமாக்கும் மருத்துவம் இல்லை என்றும், உணவில் கிழங்கு வகைகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் கூறி, சில விரல் பயிற்சிகளைச் செய்ய அறிவுறுத்தினர்.

அதன்பின் அலோபதி, சித்தா, ஆயுர்வேதம், யுனானி போன்ற பல்வேறு மருத்துவ முறைகளையும் முயற்சி செய்தேன். ஆனால் கணிசமான முன்னேற்றம் எதுவும் இல்லை. சில வருடங்களுக்குப் பிறகு, வலது முழங்காலில் திடீரென கடுமையான வலியும் வீக்கமும் ஏற்பட்டது. படுக்கும்போது கால்மேல் கால் வைத்தால்கூட வலி தாங்க முடியாததாக இருந்தது.

அந்த வலி சில ஆண்டுகளில் வலது காலிலிருந்து இடது காலுக்கும் பரவியது. தரையில் உட்கார முடியாத நிலை ஏற்பட்டது. இந்த வலிகளோடு கூட, ஆர்வம் குறையாமல் நான்கு முறை அமெரிக்கா பயணம் செய்திருக்கிறேன். ஒருமுறை, பார்க்க வேண்டிய இடங்களுக்கு என்னை வீல் சேரில் அமர்த்தி அழைத்துச் சென்ற காட்சி இன்றும் நினைவில் நின்று விடுகிறது.

கேரளாவில் பதின்மூன்று நாட்கள் தங்கி எண்ணெய் மசாஜ் மற்றும் மருந்து சிகிச்சை எடுத்தபோது ஒரு வருடம் ஓரளவு நிம்மதி கிடைத்தது. ஆனால் நீண்ட நேரம் நடக்கவோ நிற்கவோ செய்தால் வலி மீண்டும் வந்து விடும். ஓய்வாக அமர்ந்தால் மட்டுமே வலி குறையும்.உடற்பயிற்சி இல்லாத வாழ்க்கை உடலை பலவீனமாக மாற்றுகிறது. மெலிந்தவர்களாக இருந்தாலும், பருமனாக இருந்தாலும் மூட்டுத் தேய்மானம் வரலாம். குறிப்பாக அதிக உடல் எடையுள்ளவர்களுக்கு நடப்பதே பெரும் சிரமமாகி விடுகிறது

இந்த நிலைக்கு நிரந்தரமான தீர்வு முழங்கால் மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சை (Knee Replacement) என்பதுதான் என்று மருத்துவர்கள் கூறினார்கள். ஆனால் அந்த சிகிச்சையை நான் பத்து ஆண்டுகளாகத் தவிர்த்து வந்தேன். கணவர், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்—எத்தனை பேரின் அறிவுரைகள்! எல்லாம் சாரலாக என்னைத் தொட்டாலும், நான் பிடிவாத மழையில் நனைந்து கொண்டே இருந்தேன்.

ஒரு கட்டத்தில் காலையே நகர்த்த முடியாத நிலை வந்தது. குழந்தைகள் அருகில் இல்லாத சூழ்நிலையில், கணவருக்கு அதிக சிரமம் கொடுக்கிறோமோ என்ற எண்ணம் மனதில் தோன்றியது. அந்த உணர்வே இறுதியில் எனக்கு முடிவெடுக்கத் துணிவளித்தது.

அறுவைச் சிகிச்சைக்கு ஒப்புக்கொண்டதும், மருத்துவர் நேரம் மூன்று மாதங்களுக்கு பிறகே கிடைத்தது. நண்பர்களின் உதவியால் அது இரண்டு வாரங்களுக்குள் கிடைத்தது. இரண்டு கால்களுக்கும் ஐந்து நாட்கள் இடைவெளியில் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. இறைவன் அருளால் அது வெற்றிகரமாக முடிந்தது.

என் அனுபவத்தின் அடிப்படையில் சொல்ல வேண்டுமென்றால், கடுமையான முழங்கால் மூட்டுத் தேய்மானத்திற்கு நிரந்தர நிவாரணம் அளிக்கும் வழி இந்த மூட்டு மாற்று அறுவைச் சிகிச்சைதான். அறுவைச் சிகிச்சையின் போது வலி நிவாரண மருந்துகள் வழங்கப்படுவதால் நாம் நினைப்பது போல் அதிக வலி இருக்காது.

பதிமூன்று நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றேன். வழக்கமான உணவுதான் வழங்கப்பட்டது.

இந்த அறுவைச் சிகிச்சை மிகவும் பயங்கரமானது அல்லது கட்டுப்பாடுகள் நிறைந்தது என்று எண்ணி பயப்படத் தேவையில்லை. ஆனால் அதன் பின் மூன்று மாதங்கள் தொடர்ந்து உடற்பயிற்சி செய்வது மிகவும் அவசியம்.

முதல் மாதம் walker உதவியுடன் நடக்க வேண்டும். அடுத்த மாதம் சுவரைப் பிடித்து நடைப் பயிற்சி செய்ய வேண்டும். படிகளில் ஏறி இறங்குவதையும் மெதுவாகப் பழக வேண்டும். அந்த பயிற்சிகளின் போது முதியவர்களும் குழந்தைகள் போல மீண்டும் நடை கற்றுக்கொள்வதை உணர முடியும்.

மூன்று மாதங்களுக்கு பின் தினமும் அரை மணி நேரம் நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

இன்று நான் நன்றாக நடக்கிறேன். குடும்ப விழாக்களிலும் சந்தோஷ நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறேன்.

“யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. நான் பெற்ற இந்த நிம்மதியை மற்றவர்களும் பெற வேண்டும் என்பதே என் மனமார்ந்த விருப்பம்.

என் வாழ்க்கையில் நீண்ட காலமாக இருந்த கர்மத்தின் சுமை, இறைவன் அருளால் இப்போது வசந்தகால சாரலாக மாறிவிட்டது.

இந்த அனுபவத்தை பகிர்ந்து கொள்ள ஒரு அரிய வாய்ப்பை அளித்த கொலம்பஸ் வாழ் அன்பு உள்ளங்களுக்குப் என் இதயங்கனிந்த நன்றிகள்.

அறிவோம் - அறியப்படாத தமிழகம்



இராமசாமி சோமசுந்தரம்

சென்ற ஆண்டு தாயகப் பயணத்தின்போது, மதுரையின் மேலக்கோபுர வாசலருகே உள்ள பழைய புத்தகக் கடையொன்றில் தமிழ் நூல்கள் சிலவற்றினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தபோது கண்ணில் பட்டது, தொ. பரமசிவன் அவர்கள் எழுதிய “அறியப்படாத தமிழகம்” எனும் நூல். முனை மழுங்கி, தாள்கள் பழுப்பேறி, கரையானோ பூச்சியோ நூலின் ஓரத்தினை அரித்தெடுத்திருந்தாலும், நூலின் தலைப்பு தந்த ஈர்ப்பினால், அதனைக் கீழே வைக்க மனமில்லாமல் புரட்டிக் கொண்டிருந்தேன். இதற்கு முன்பு தொ. பரமசிவனின் மற்றைய நூல்களை நான் வாசித்தவன் அல்லன். தொ. பரமசிவன் பற்றி நான் அறிந்தது, அவர் சில ஆண்டுகளுக்கு முன்பு காலஞ்சென்ற தமிழாய்வாளர் எனும் விடயம் மட்டுமே. பின் அட்டையில், அணிந்துரையிலிருந்து எடுக்கப்பட்ட இந்த மூன்றே மூன்று வரிகள் கண்களில் பட்டுக் கடைக்காரரிடம், “அண்ணே, இதையும் பில் போட்டுவிடுங்கள்” எனக் கொடுக்கத் தூண்டின. அவை…

- நாம் அறிந்த தமிழகத்தின் அறியாத பரிமாணம் இந்நூல்.
- ஒரு பொருட்டாக நாம் கருதாத ஒரு செய்தியை எடுத்துக் கொண்டு அதில் வரலாறும் பண்பாடும் எவ்வாறு படிவம் படிவமாகப் படிந்துள்ளன என்பதை நூலின் ஒவ்வொரு கட்டுரையும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.
- உப்பு, எண்ணெய், தேங்காய், வழிபாடு, விழாக்கள், உடை, உறவுமுறை, உறவுப் பெயர்கள் என அன்றாட வாழ்வின் பகட்டில்லாத பல்வேறு கூறுகளைக் கொண்டு தமிழ்ச்சமூகத்தின் ஈராயிரம், மூவாயிரமாண்டு வரலாற்று அசைவியக்கம் இந்நூலில் கோடிட்டுக் காட்டப் பெறுகின்றது.

நூலின் அளவு சிறியதுதான். நூற்றுப் பத்துப் பக்கங்களைக் கொண்ட சிறிய நூல்தான். இருப்பினும் தோண்டத்தோண்டக் குறையாமல், நூல் முழுவதுமாக ஆய்வுத்தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன. பல தலைப்புகளினால் ஆன இந்நூலை நான், பல்விதமனான பூக்களினால் கோக்கப்பட்ட ஒரு மாபெரும் பூமாலையாகவே கருதுகிறேன். இந்நூலில் என்னைக் கவர்ந்த விடயங்கள் ஏராளமாகவே இருந்தாலும், ஒரு சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து, நம் ஆய்வாளர் திரு. தொ. பரமசிவன் அவர்களின் எழுத்துகள் சிறிதும் மாறாமல், இதோ உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

தண்ணீர்

தமிழ்நாடு நிலநடுக்கோட்டை ஒட்டிய வெப்பமண்டலப்பகுதியைச் சேர்ந்ததாலேயே, நீர் குறித்த நம்பிக்கைகளும் அவற்றின் வெளிப்பாடுகளும் நிறையவே உள்ளன.

குளிர்ச்சியினை உடையது என்பதனால் நீரைத் ‘தண்ணீர்’ என்றே தமிழர்கள் வழங்கி வருகின்றனர். நீரினால் உடலைத் தூய்மை செய்வதனைக் ‘குளிர்த்தல்’ (உடலைக் குளிர்ச்சி செய்தல்) என்று குறித்தனர்.

நீர் நிலைகளுக்குத் தமிழர்கள் வழங்கி வந்த பெயர்கள் பல.

- சுனை, கயம், பொய்கை, ஊற்று என்பன, தானே நீர் கசிந்த நிலப்பகுதிகளாகும்.
- குளி(ர்)ப்பதற்குப் பயன்படும் நீர்நிலை ‘குளம்’ என்பதாகவும்,
- உண்பதற்குப் பயன்படும் நீர்நிலை ஊருணி எனவும்,
- ஏர்த்தொழிலுக்குப் பயன்படும் நீர்நிலை ஏரி என்றும்,
- வேறு வகையாலன்றி மழை நீரை மட்டும் ஏந்தி நிற்கும் நிலையினை ஏந்தல்/ குட்டை என்றும்,
- கண்ணாறுகளை உடையது கண்மாய் என்றும் தமிழர்கள் பெயரிட்டு அழைத்தனர்.

இயற்கையின் பேராற்றலில் ஆரியர் நெருப்பினை முதன்மைப்படுத்தியது போலவே திராவிடர் நீரினை முதன்மைப்படுத்தினர்.

நீரின் சுவை அது பிறக்கும் நிலத்தால் அமையும். நிலத்தால் திரிந்து போன நீரின் சுவையை மேம்படுத்தத் தமிழர்கள் நெல்லியினை ஒரு மருந்தாகப் பயன்படுத்தினர். கிணற்று நீர் உவராக இருந்தால் அதனுள் நெல்லி மரத்தின் வேர்களைப் போட்டு வைப்பதும், ஊருணிக் கரைகளில் நெல்லிமரங்களை நட்டு வைத்து அதற்கு நெல்லிக்காய் ஊருணி என்று பெயரிடுவதும் தமிழ் மக்களின் வழக்கம்.

தமிழர் உணவு

அடுப்பில் ஏற்றிச் சமைப்பது 'அடுதல்' எனப்படும். சமையல் செய்யப்படும் இடம் அட்டில் அல்லது அடுக்களை.

சங்க இலக்கியத்தில் மிளகு, நெய், புளி, கீரை, இறைச்சி, கும்மாயம் பற்றிய உணவுக் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

காய்கறி என்ற சொல் காய்களையும், மிளகையும் சேர்த்துக் குறிக்கும். கி.பி.15ஆம் நூற்றாண்டில்தான் சிலி நாட்டில் இருந்து வந்த மிளகாய் தமிழ் நாட்டிற்குள் புகுந்தது. அதுவரை, தமிழர் சமையலில் உறைப்புச் சுவைக்காகக் கறுப்பு மிளகினை (கருங்கறி) மட்டுமே பயன்படுத்தி வந்தனர். இறைச்சி உணவிற்கு அதிகமாகக் கறியினைப் பயன்படுத்தியதால் இறைச்சியே 'கறி' எனப் பின்னர் வழங்கப்பட்டது.

தமிழர் உணவு முறைகளில் நீரிலிட்டு அவித்தல், அவித்து வேக வைத்தல், வறுத்து அவித்தல், சுடுதல், வற்றலாக்குதல், வேகவைத்து ஊறவைத்தல் ஆகியவைகளால் செய்யப்படும் உணவுப் பண்டங்களே அதிகமாக இருந்தன.

எண்ணெயில் இட்ட பண்டங்கள் (குறிப்பாக வடை, பஜ்ஜி, மிக்சர், காராச்சேவு போன்றவை) அண்மைக் காலங்களிலேயே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் நிலக்கடலை எண்ணெய்யும் விசயநகர ஆட்சிக் காலத்தில் இங்கு அறிமுகமானது.

நாயக்க மன்னர்கள் காலத்தில் அவர்களால் தமிழ்நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட இந்தி பேசும் மக்கள் பிரிவினர், சர்க்கரை, கோதுமை, நெய், கடலை மாவு கொண்டு புதிய இனிப்பு வகைகளை அறிமுகப்படுத்தினர். அதற்கு முன்பு வரை இனிப்புக்கு வெல்லம் அல்லது கருப்புக்கட்டி (கருப்பட்டி) ஆகியனவே பயன்படுத்தப்பட்டு வந்தன.

நகர்ப்புறமயமாக்கல், தொடர்புச் சாதனங்களின் விளம்பரத் தன்மை, பொருளியல் வளர்ச்சி, பயண அனுபவங்கள் ஆகியவை காரணமாகக் கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குள் தமிழர்களின் உணவு முறை மிகப்பெரிய அளவில் மாறுதல் அடைந்திருக்கிறது.



உணர்வும் உப்பும்

‘உப்பு’ என்ற தமிழ்ச் சொல்லுக்குச் சுவை என்பதே முதற்பொருள். இனிப்பு, கசப்பு, துவர்ப்பு என்று சுவைகளெல்லாம் ‘உப்பு’ என்ற சொல்லை அடியாகக் கொண்டே பிறந்தவை.

சமையலுக்குப் பயன்படுத்தப்படும் உப்பிற்கு ‘வெள்ளுப்பு’ என்று பெயர்.

பழந்தமிழர்களால் சுவையின் சின்னமாகவும் வளத்தின் சின்னமாகவும் உப்பு கருதப்பட்டது. பழந்தமிழ்நாட்டின் மிகப்பெரிய சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக உப்பு விளங்கியிருக்கிறது. ‘நெல்லின் நேரே வெண்கல் உப்பு’ என்று பெண் ஒருத்தி விலை கூறி உப்பு விற்பதனைச் சங்க இலக்கியத்தில் பார்க்கிறோம். சோழர் காலத்திலும் நெல்லின் விலையும் உப்பின் விலையும் அருகருகே இருந்தன என்று கல்வெட்டுகளில் இருந்து தெரிகிறது.

செய்த வேலைக்கு மாற்றாக நெல்லும் (சம்பாவும்) உப்பும் (அளத்தில் விளைவது) கொடுத்த வழக்கத்தினால் தான் ‘சம்பளம்’ என்ற சொல் பிறந்தது என்பர்.

உப்பு உலோகத்தை அரிக்கும் தன்மை கொண்டதனால் ‘மரவை’ எனப்படும் மரச்சட்டியிலும் ‘கல்மரவை’ எனப்படும் மாக்கல் சட்டியிலும் வீடுகளில் உப்பு இட்டு வைக்கப்பட்டிருக்கிறது. இப்பாத்திரங்கள் இப்போது பண்பாட்டு எச்சங்களாக விளங்குகின்றன.

தமிழ்நாட்டின் சமூகப்படி நிலைகளை அடையாளம் காட்டும் பொருள்களில் ஒன்றாகவும் உப்பு விளங்கியுள்ளது. ஆக்கிய சோற்றோடு உப்பைச் சேர்த்து உண்பது ஒரு வழக்கமாகும். சாதிய ஒடுக்குமுறை கடுமையாக இருந்த காலத்தில், ஒடுக்கப்பட்ட சாதியார், சோறு உலையில் இருக்கும்போதே அதில் உப்பையிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இலையில் தனியாக உப்பிட்டு உண்ணும் வழக்கம் மேட்டிமையின் சின்னமாகக் கருதப்பட்டிருந்தது.

தமிழர் உடை

“உண்பது நாழி உடுப்பவை இரண்டே” என்கிறது புறநானூறு. இடுப்பைச் சுற்றும் அரையாடை, தோளில் இடும் மேலாடை ஆகியவற்றையே இப்பாடல் குறிக்கிறது.இவ்வுடை அக்காலத்தில் ஆண் பெண் இருவருக்கும் பொதுவாக இருந்திருக்கிறது. இந்த இரட்டை ஆடையும் சாதி, பருவ காலம் என்பவை கருதி மாறுபாடுகளை உடையதாக இருந்திருக்கிறது.

ஆணாயினும் பெண்ணாயினும் உயர்குடி மக்களே முழங்காலுக்குக் கீழே கணுக்கால் வரையிலான ஆடையினை அணிந்திருக்கின்றனர். ஏனைய ஆண்களெல்லாம் முழங்கால் வரை தார் பாய்ச்சிக் கட்டப்பட்ட அரையாடையினையே அணிந்திருக்கின்றனர்.

பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன்னர், ‘புடவை’ என்ற சொல் ஆண்களும் பெண்களும் மேலே அணியும் நீண்ட துணியினையே குறித்தது.

நிர்வாணத் துறவியாகச் சமண மதத்தில் இருந்த திருநாவுக்கரசர் சமண மடத்தை விட்டு வெளியேறும்போது ‘வெண்புடைவை மெய்சூழ்ந்து’ வந்ததாகச் சேக்கிழார் குறிப்பிடுவார்.

மக்கட்பெயர்

சங்க காலத்திலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து இடம்பெற்று வரும் பெயர் வழக்குகளாகச் சிலவற்றைப் பார்க்கிறோம். கண்ணன், குமரன், சாத்தன் (சாத்தையா, சாத்தப்பன்), நாகன் (நாகப்பன், நாகம்மாள், நாகராசன்), மருதன் (மருதப்பன், மருதையன், மருதமுத்து) ஆகியவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம்.

அரசியல், சமூகம், ஆன்மீகம் ஆகிய துறைகளில் செல்வாக்குப் படைத்தவர்களை இயற்பெயர் இட்டு வழங்குவது மரியாதைக் குறைவு என்ற எண்ணம் பல நூற்றாண்டுகளாகத் தமிழர்களுக்கு இருந்திருக்கிறது. ஏறைக்கோன், மலையமான், ஆவூர்கிழார், கோவூர்கிழார், இளங்கோ, அரூரன் போன்ற பெயர்களை சான்றாகக் காட்டலாம்.

குறைந்தது ஐந்து நூற்றாண்டு காலம் தமிழகத்தில் செழித்து வாழ்ந்திருந்த சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கும் தமிழ் மக்களின் பெயர்களில் இன்றளவும் தங்கியுள்ளது. குணம் என்ற முன்னடையோடு கூடிய பெயர்களும் பாலன் என்ற பின்னடையோடு கூடிய பெயர்களும் சமணக் கல்வெட்டுகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன. (குணசீலன், குணசேகரன், குணபாலன், தனபாலன், சத்யபாலன் ஆகியவை).

FamilyGuard360
No Family Left Behind
360
Vadivu Pandiyan
(484) 908-1131
vadivu@familyguard.life
Financial Services Professional
Licensed in Multiple States
WILL & TRUST
TAX SAVINGS STRATEGY
RETIREMENT PLANNING
401K & IRA ROLLOVER
COLLEGE SAVINGS
ANNUITY/LIFETIME INCOME
LIFE INSURANCE
HEALTH INSURANCE
LONG TERM CARE & DISABILITY
PART TIME OPPORTUNITY (REMOTE)
FinTech
Free Consultation
SCAN HERE
AIG
F&G
AMERICAN EQUITY
annexus
ATHENE
Nationwide
Mutual of Omaha
NORTH AMERICAN
Americo
netlaw

LIFE INSURANCE

LEGAL PROTECTION

பக்தி இயக்கமாக எழுச்சி பெற்ற சைவமும் வைணவமும் தமிழர்களின் பெயரிடும் மரபைத் தலைகீழாக மாற்றிக் காட்டின.

அரசியல் அதிகாரத்தில் இருந்தவர்கள் விசயாலயன், ஆதித்தன், பராந்தகன், சுந்தரன், உத்தமன், விக்கிரமன் என்ற வடமொழிப் பெயர்களை தங்களுக்குச் சூட்டிக் கொண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

வரலாற்றுப் போக்கில் பெயரிடும் முறையை மேலோர், கீழோர் என்ற பிரிவு 15 ஆம் நூற்றாண்டில் பிறந்த விசயநகரப் பேரரசு எனும் இந்து சாம்ராஜ்யத்தினால் விளைந்தவை ஆகும்.

மண்ணாங்கட்டி, அகோரம், ஆபாசம், அமாவாசை, பிச்சை முதலிய பெயர் வழக்குகள் மந்திர நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்தவை. இந்த நம்பிக்கை ஒடுக்கப்பட்ட சாதியாரிடத்தேதான் வலுவாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், ஒடுக்கப்பட்ட மக்களிடத்திலே பரவலாக வழங்கும் பெயர்களாக, பலவேசம், விருமன், ஒச்சன், சுடலை, கருப்பன், பேச்சி, ஆண்டி முதலியவை பெரும்பாலும் சிறு தெய்வப் பெயர்களை ஒட்டி அமைந்தவை.

பெருந்தெய்வங்களின் பெயர்களையோ, பெரியசாமி, ராஜா என மேன்மை சுட்டும் பெயர்களையோ ஒடுக்கப்பட்ட சாதியினர் தம் பிள்ளைகளுக்கு இட முடியாதவாறு பண்பாட்டு ஒடுக்குமுறை நிலவியது.

திருவிழாக்களும் வழிபாடும்

தமிழர்களின் தனிப்பெரும் திருவிழாவாகத் திகழும் தைப்பொங்கல் திருநாள், பிறப்பு, இறப்புத் தீட்டுகளால் பாதிக்கப்படாத திருவிழா என்பது பலர் அறியாத செய்தி. தைப்பொங்கல் நாளன்று ஒரு வீட்டில் இறப்பு நிகழ்ந்தாலும் மிகவிரைவாக வீட்டைச் சுத்தம் செய்து இறந்தவர் உடலை எடுத்துச் சென்றவுடன் தைப்பொங்கல் இடும் வழக்கத்தை நெல்லை மாவட்டத்தில் காணலாம்.

பொங்கல் திருநாளன்று, திருவிளக்கின் முன் படைக்கும் பொருட்களில் காய்கறிகளும், கிழங்கு வகைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றுள் கிழங்கு வகைகள் (சேனை, சேம்பு, கருணை, சிறுகிழங்கு, பனங்கிழங்கு) பார்ப்பனர்களாலும் பெருங்கோயில்களாலும் காலங்காலமாக விலக்கப்பட்ட உணவு வகைகள் என்பது குறிப்பிடத் தகுந்தது. மேற்குறித்த இரண்டு செய்திகளாலும் தைப்பொங்கல் தமிழர்களின் திருவிழா என்பதையும் அது பார்ப்பனியப் பண்பாட்டிலிருந்து விலகி நிற்பது என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

திருக்கார்த்திகைத் திருவிழா, திருவாதிரைத் திருவிழா, தைப்பூசத் திருவிழா, பங்குனி உத்திரம், மாசிக்களரி, சித்திரைப் பிறப்பு, வைகாசி விசாகம், ஆடிப் பதினெட்டாம் பெருக்கு ஆகியன பக்தி இயக்கத்துக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த திருவிழாக்கள் ஆகும். இவற்றைச் சைவ வைணவப் பெருஞ்சமயங்கள் தம்வயமாக்கிக் கொண்டிருக்கின்றன.

தீபாவளி, தமிழ்நாட்டின் மரபுவழிப் பொருளாதாரத்தோடும், பருவநிலைகளோடும் சடங்குகளோடும் தொடர்பில்லாத ஒரு திருவிழா. விளக்குகளின் வரிசை எனப் பொருள்படும் தீபாவளி (தீப+ஆவளி) என்னும் வடசொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல்லும் புழக்கத்தில் இல்லை. தமிழர்களின் விளக்குத் திருவிழா என்பது திருக்கார்த்திகைத் திருவிழாவே. தீபாவளிக்காகக் கூறப்படும் நரகாசுரன் கதையும் திராவிடப் பண்பாட்டோடு தொடர்புடையதன்று. மாறாக பிராமணிய மதத்தின் எதிரியான சமண மதத்தின் இருபத்து நாலாம் தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் வீடுபேறடைந்த (இறந்த) நாளாகும். தாம் இறந்த நாளை வரிசையாகத் தீபங்களை ஏற்றிக் கொண்டாடுமாறு மகாவீரர் தம் மதத்தவரைக் கேட்டுக் கொண்டார். ஆகவே சமணர்கள் தீபாவளியைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். நரகாசுரன் அழிந்ததாக பிராமணியத் தீபாவளிக் கதைகள் குறிப்பிடுவது மகாவீரர் இறந்த நாளையே ஆகும். விசயநகரப் பேரரசான ‘இந்து சாம்ராஜ்ஜியம்’ தமிழ்நாட்டில் நுழைந்த, கி.பி. 15ம் நூற்றாண்டு தொடங்கியே தீபாவளி இங்கு ஒரு திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

வடநாட்டு இந்துக்களிடமும் சமணர்களிடமும் இல்லாதபடி தமிழ்நாட்டில் இத்திருவிழா நாளன்று மக்கள் எண்ணெய் தேய்த்துக் குளிக்கின்றனர். எண்ணெய் தேய்த்துக் குளித்தல் என்பது தமிழ்நாட்டில் நீத்தார் நினைவில் இறுதி நாளைக் குறிக்கும் சடங்காகும்.

தமிழ்நாட்டில் பார்ப்பனர்களும் இத்திருவிழாவை இறந்தார் இறுதிச் சடங்கு போல 'கங்கா ஸ்நானம்' செய்து கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது.

பிள்ளையார், விநாயகர், கரிமுகன், ஆனைமுகன், கணபதி என்று பல்வேறு பெயர்களால் அறியப்படும் தெய்வமே இன்று தமிழ்நாட்டில் மிகப் பரவலாக வணங்கப்பெறும் கடவுள். ஆனை முகமுடைய இந்தக் கடவுள் கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டுக்கு அறிமுகமாகியுள்ளார். சங்க இலக்கியங்களில் இக்கடவுளைப் பற்றிய குறிப்புகள் இல்லை. இக்கடவுள் வழிபாடு மராட்டியத்தின் தென்பகுதியில் புனா நகரைச் சார்ந்த சித்பவனப் பார்ப்பனர் இடையே தோன்றி, பின் கீழைச்சாளுக்கியருடைய வாதாபி நகரத்தில் நிலைகொண்டு அங்கிருந்து தமிழ்நாட்டுக்குள் பரவி வளர்ந்தது என்று கூறுவர். தமிழ்நாட்டில் பிள்ளையார் வழிபாடு என்பது வாணிகச் சாதியினரால் வளர்த்தெடுக்கப்பட்டது என்பது பல சான்றுகளால் உறுதியாகிறது.

100
SRB
PRIDE OF MADURAI SINCE 1901
SRB SILKS
FASHION CREATORS IN SILK SAREES
952 290 6405
krithikakuduva@gmail.com
503, Gracelyn Way, Lewis Center, OH 43035

PUNITHA SUNDARESAN
REDONE REALTY
CELL : 614 352 7596

GASTRO OFFICE
KRISHNA RAYAPUDI MD DABOM
ROHAN MODI MD
www.gastrooffice.com
ph: 614-385-5900 txt: 614-412-3587
4600 Leap Ct, Hilliard OH 43026


Celebrating
25 Years!
Natiyalayam Dance School
Guru Suneetha Ravindran
Thank you for being part of our journey.
614-209-7846

SAMATVA
WEALTH MANAGEMENT LLC

Divine joy is experienced through the joy of dancing
2000
Kalabavanam
கலாபவனம்
Priya Gajaananan
www.kalabhavanam.com
(614) 570 3318
கலை இன்பமே இறை இன்பம்

Santhi's
Enjoy The Diffrence
Fashion
515-918-3959
533 GRACELYN WAY LEWIS CENTER, OH
SANTHIVIJAYAKUMAR09@GMAIL.COM

தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு

ஆலோசனைக்குழு

தனிசீலன் காளிமுத்து

மதிவதனி சாந்தி ஈஸ்வரன்

ஜெகதீஸ்வரன் கணேசன்

செயற்குழு

லாவண்யா ராமு
தலைவர்

சதீஷ் பாபு ராமச்சந்திரன்
பொருளாளர்

நிர்மலா நடராஜன்
செயலாளர்

சதீஷ் ராஜ்
டிஜிட்டல்

ஜானு இசக்கிராஜ்மோகன்
நிகழ்ச்சி

அனு கணேஷ்
விளையாட்டு

பாலசுப்பிரமணியன் சசிகலா நெடுஞ்செழியன்
நிகழ்ச்சி

சங்கீதா ராஜேஷ்
தகவல் தொடர்பு

விஜிதா பத்மநாதன்
மக்கள்தொடர்பு

சாரல் குழு

நடராஜன் முத்துசாமி

சிவக்குமார் ராஜு

ஜெகதீஸ்வரன் கணேசன்

மதிவதனி சாந்தி ஈஸ்வரன்

பத்மா முத்துகுமார்

தனிசீலன் காளிமுத்து

மதுமதி பாலகுமார்

சுமித்ராதேவி கலியபெருமால்

வினோத்ராஜ் சுந்தரம் பாபு

சரிபார்த்தோர் குழு

சிவா ராமசுவாமி

ரம்யா

மல்லிகா முத்துராமலிங்கம்

மீ . கணேஷ் பிரபா

ரம்யா சிவசுப்ரமணியன்

மிருதுளா சேகர்

வடிவமைத்தோர் குழு

பாரதி அன்பழகன்

மினோஜினி வளையாபதி

சிவசங்கரி கணேஷ்

விஜிதா பத்மநாதன்

குளிர் காலத்தில்
மீண்டும் உங்களை சாரலில் சந்திப்போம்.

புகைப்படம்: ஜெயவேல் சக்கரவர்த்தி.S